கொனிக்கா கலர்லாப்

உங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் HD தொழில்நுட்பத்தில் வீடியோ மற்றும் போட்டோ பிடித்து நவீன முறைப்படி செய்து தரப்படும்.



Konica 14, ஸ்ரீ வெங்கடேஸ்வரர் வீதி, யாழ்ப்பாணம்



# யாழ் தினக்குரல்

தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com



சிறி ராம் ஜீவல்லர்ஸ்




158,193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொ.பே:-0212228334



ஓசை : 020 குரல் : 257 வெள்ளிக்கிழமை 26 நவம்பர் Friday 26th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


### கடுமையான பொலிஸ், இராணுவ, புலனாய்வு பாதுகாப்பையும் மீறி

# யாழ்.பல்கலைக் கழகத்தில் மாவீரர் தினம் அனுஷ்டிப்பு



யாழ். பல்கலைக்கழகத்தில் வருடா வருடம் இடம்பெற்று வருகின்ற மாவீரர் வாரத்தை முன்னிட்டு நேற்றையதினம் பல்கலைக்கழக மாணவர்களினால் மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மாணவர்கள் முழந்தாளில் இருந்து மாவீரர் நினைவிடத்தில் ஆத்மார்த்தமான அஞ்சலி செலுத்தினர்.

குறிப்பாக பல்கலைக்கழகச் சூழலில் இராணுவத்தினரும் பொலிசாரும் இராணுவ பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மாணவர்கள் தமது அஞ்சலிகளை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (30)


செலான் வங்கியிடமிருந்து

உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும்

முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூ.87,000/=

- அதிகபட்ச இரகசியதன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

011 200 88 88

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்

செலான் தங்கக் கடன் Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka) செலான் வங்கி


## யாழில் வைத்தியசேவைகள் ஸ்தம்பிதம்; மக்கள் அவதி

-யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வேதனை-



கடந்த இரண்டு நாட்களாக இடம் பெறும் வைத்திய சாலை சுகாதாரத்துறை பணியாளர்களின் பணிப் பகிஷ்கரிப்பால் நோயாளர்கள் பெரும் கஷ்டங்களுக்குள்ளானதுடன் தற்போதைய கொரோனா பாதிப்பு நிலையில் சுகாதாரத் துறையினரின் செயற்பாடு வேதனையளிப்பதாக

பக்கம் 02

## அரசுக்கு தயாசிறி கடும் எச்சரிக்கை



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

எமது கட்சித் தலைவரான மைத்ரிபால சிறிசேன மீது தாக்குதல் நடத்தி குற்றம்சாட்டும் செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முயன்றால் அரசு பாரிய நெருக்கடிக்குள் செல்லும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர அரசுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய

பக்கம் 02

### -பாராளுமன்றில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டால்-

# பங்காளிகளுக்குள் பகிரங்க மோதல்

### -கடும் எச்சரிக்கைகள், மிரட்டல்கள், சவால்களை வெளிப்படையாகவே விடுத்த இரு தரப்பும்-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

அரசின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவுக்கும் அரசின் பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் இதுவரை மறைமுகமாக இருந்த வந்த பகை, முரண்பாடுகள் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் பகிரங்கமாக வெடித்ததுடன் இரு தரப்புக்களுக்கும் கடும் எச்சரிக்கைகளையும் மிரட்டல்களையும் சவால்களையும் வெளிப்படையாகவே வெளியிட்டன.

பக்கம் 02

## மார்ச் மாதமளவில் சிவில் யுத்தம் வெடிக்கும்

-லக்ஷ்மன் கிரியெல்ல-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



நாட்டில் பொருளாதார நெருக்கடி நீடித்தால் எதிர்வரும் மார்ச் மாதமாகும்போது சிவில் யுத்தம் ஒன்று ஏற்படுவதனை யாராலும் தடுக்க முடியாது எனத்தெரிவித்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி,சிறுபான்மை சமூகங்களுக்கு நெருக்கடிகளை கொடுக்கும் அரசுக்கு ஒருபோதும் சர்வதேசத்தினால் நிதி கிடைப்பதில்லை என்பதனை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு,பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே

பக்கம் 04

### எமது கைகளிலேயே 3/2 பெரும்பான்மை

## நாங்கள் அடித்தால் வேறு விதமாக அடிப்போம்-மைத்திரி



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பொதுஜன பெரமுன அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 எம்.பி.க்களின் கைகளிலேயே இருக்கின்றது.

இதனால் நாம் மோதிக் கொண்டால் என்ன நடக்கும் என்பதனை வரலாறுகளைப் பார்த்து உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் அடித்

பக்கம் 02

## எங்களுக்கு அடித்தால் திருப்பியடிப்போம்

-அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



எங்களுக்கு அடித்தால் நாங்களும் திருப்பியடிப்போம். முதுகெலும்பை பின்னால் வைத்துக் கொண்டு முடியாதவன் என்று இருக்க முடியாது.எமது ஜனாதிபதியின் முன்மாதிரியான நடவடிக்கை தொடர்பிலேயே கூறியிருந்தேன். இதனை சுட்டிக்காட்டுவதற்கு யாருடைய அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். தயாசிறி ஜயசேகர எனது பெயரை பயன்படுத்தி மிகவும் கீழ்த் தரமாக கூறியுள்ளார்.

பக்கம் 04

### ஜனநாயகம் தொடர்பான மாநாட்டிற்கு

## இலங்கையை புறக்கணித்த அமெரிக்க ஜனாதிபதி

100 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் இணையவழி ஜனநாயக மாநாட்டிற்கு அழைப்பு விடுக்காததன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கையை புறக்கணித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் நேபாளம் ஆகிய தெற்காசிய நாடுகளுக்கு உச்சி மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உச்சிமாநாட்டிற்கு அழைக்கப்படாத நாடுகளில் இலங்கையுடன் சீனாவும் ரஷ்யாவும் உள்ளடங்கும்.

உச்சிமாநாட்டிற்கு அழைக்கப்பட்ட 110 நாடுகளில் தாய்வான், பிலிப்பைன்ஸ், மெக்சிகோ ஆகியவை அடங்கும் என்று அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட

பக்கம் 02

## இந்தியாவின் விருப்பத்துக்கு மாறாகவே நடக்கின்றீர்கள்

-கஜேந்திரகுமார் எம்.பி. கூறுகிறார்-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் விதமான கொள்கைகளையே இலங்கை எப்போதும் வகுத்து வந்துள்ள நிலையில் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே நாடாக தாம் இருக்க வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகின்றது. இந்நிலையில் இந்தியாவை சமாளிக்கலாம் என நீங்கள் நினைத்து அதற்கு ஏனைய வல்லரசுகளுக்கு சில பகுதிகளையும் இந்தியாவிற்கு சில பகுதிகளையும் வழங்கலாம் எனக்

பக்கம் 04

## சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துச் சிதறக் காரணம் என்ன?

### நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் தகவல்



எரிவாயு சிலிண்டர்கள் கலவையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களே அவை தற்போது வெடித்துச் சிதறக் காரணம் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்த்தனவை மேற்கோள் காட்டி டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து டெய்லி மிரர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்

பக்கம் 02

## எந்த நாட்டின் முன்பும் மண்டியிட மாட்டோம்

-வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்-

பக்கம் 02

## எரிவாயு சிலிண்டர் நேற்று வெடித்தது

-வீடொன்று பலத்த சேதம்

பக்கம் 07

## சமையல் எரிவாயு சிலிண்டர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையின் பல இடங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறியமைக்கு அவற்றின் கலவையில் ஏற்பட்ட மாற்றமே காரணம் என அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து எரிவாயுக் கசிவு குறித்து பொதுமக்கள் முறைப்பாடு செய்த போதிலும் எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமைக்காக இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன.

ஜூன் 18 ஆம் திகதி லிட்ரோ எரிவாயு ஒழுங்குபடுத்துனருக்கு அப்பாற்பட்டதா? எனவும் ஒகஸ்ட் 25 ஆம் திகதி இலங்கையின் சமையல் எரிவாயு சந்தையில் குழறல்கள் என்ற தலைப்பிலும் டெய்லி மிரர் பிரத்தியேக செய்திகளை வெளியிட்டிருந்தது.

ஏப்ரல் மாதத்திலிருந்தே தெரியவராத காரணங்களிற்காக சிலிண்டரின் எரிவாயுக் கலவையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. லிட்ரோ நிறுவனமும் லாஃப் நிறுவனமும் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த மாற்றங்களை மேற்கொண்டுள்ளன.

கடந்த ஏப்ரலில் இருந்து லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் சிலிண்டரின் வாயுக் கலவையை பியூட்டன் 80 : புரொபேன் 20 என்ற நிலையிலிருந்து முறையே பியூட்டன் புரொபேன் 50க்கு 50 என மாற்றியுள்ளன. வால்வுகளில் கசிவுகள் ஏற்படுகின்றன என வெளியான முறைப்பாடுகளுக்கு இதுவே காரணம்.

எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றங்களே அனைத்து வெடிப்புச் சம்பவங்களுக்கும் காரணம் என தான் உறுதியாக நம்புவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்த்தன டெய்லி மிரருக்கு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண, இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் சித்திக சேனரட்ண ஆகியோருடன் நானும் ஏனைய அதிகாரிகளும் இலங்கை நுகர்வோர் அதிகார சபையில் இந்த வருடம் ஜூன் மாதத்தில் நடத்திய சந்திப்பின் பின்னர் நான் இந்த ஆபத்துக்கள் குறித்து எதிர்வு கூறினேன் என குறிப்பிட்ட அவர் இலங்கை ஒரு வெப்பமண்டல நாடு என்பதால் எல்பி வாயுவில் குறைந்தளவு புரொபேனும் அதிகளவு பியூட்டனும் காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஏன் எல்பி வாயுவின் கலவையில் மாற்றங்களை மேற்கொண்டீர்கள் என நாங்கள் கேட்டவேளை தரநிர்ணய நிறுவனத்தின் தலைவரிடம் எந்தப் பதிலும் இருக்கவில்லை என குறிப்பிட்ட குணவர்த்தன, நான் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கலவையைக் கொண்டிருப்பது எவ்வளவு ஆபத்தானது என்பது குறித்து அவருக்கு தெளிவுபடுத்தினேன் எனவும் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு சிலிண்டரில் அதிகளவு புரோபேன் காணப்படுவது ஆபத்தானது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் என்பதை நான் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன் எனவும் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்தேன் என அவர் குறிப்பிட்டார்.

எனினும் சித்திக சேனரட்ண எல்பி வாயுவின் கலவையில் மாற்றங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் துசான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவிற்கும் இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் கீழ் உடனடி நடவடிக்கையை எடுக்குமாறும் ,இலாபம் உழைப்பதற்காக எரிவாயு நிறுவனங்கள் சிலிண்டரின் கலவையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டாம். அதனால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனவும் வேண்டுகோள் விடுக்கும் கடிதத்தை ஜூன் பத்தாம் திகதி அனுப்பினேன் எனவும் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதனால் மிகவும் பாரதூரமான ஆபத்து ஏற்படக்கூடும்,என்பதை நான் அறிந்திருந்தேன்,அது உண்மை என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது.அமைச்சரும் இராஜாங்க அமைச்சரும் எனது கோரிக்கை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'எந்த நாட்டின் முன்பும் மண்டியிட மாட்டோம்'

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

நாட்டின் இறைமை, கௌரவத்தை பாதுகாத்தே வெளிநாட்டு கொள்கைகளை முன்னெடுப்போம் எனவும், எந்தவொரு நாட்டின் முன்னாலும் மண்டியிட மாட்டோம் எனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு, பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அதன்போது மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளின் முன்னால் நாங்கள் மண்டியிட மாட்டோம். நாட்டின் கௌரவத்தை பாதுகாத்தே வெளிநாட்டு கொள்கைகளை முன்னெடுப்போம். நாங்கள் அடிக்கடி ஐ.நா.வுக்கு தகவல்களை வழங்குகின்றோம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகள் ஜனவரியில் இலங்கை வரவுள்ளனர். நாங்கள் எதனையும் மறைக்க மாட்டோம். அனைத்தும் பகிரங்கமானதே. நாட்டில் எங்கேயும் செல்ல முடியும். கலந்துரையாடல்களையும் நடத்த முடியும்.

நாங்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையையும் அதன் ஆணையாளரையும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் ஒரு விடயத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம். இலங்கையை பின்தொடர்ந்து சாட்சியங்களை தேடி சர்வதேச நீதிமன்றத்திடம் கொண்டு செல்லும் பின்னணிகளை ஏற்படுத்தும் வகையில், இலங்கைக்காக மட்டுமென்று கொண்டுள்ள பொறிமுறைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இது ஐ.நா. பிரகடனத்தை முற்றிலும் மீறுவதாகும். சரியானதை நாங்கள் செய்வோம். ஆனால் அனைத்துக்கும் நாங்கள் இணங்க மாட்டோம்.

கடந்த செப்டம்பர் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தின் போது இலங்கைக்கு எதிரான ஒரு இலட்சத்து 20 ஆயிரம் சாட்சியங்கள் தன்னிடம் இருப்பதாக ஆணையாளர் கூறியிருந்தார். என்ன அந்த சாட்சிகள். அதனை யார் வழங்கியது. அதன் உண்மைகள் தொடர்பில் அறியும் உரிமை எங்களுக்கு இருக்கின்றன. மறைந்துள்ள சாட்சிகளை வைத்துக்கொண்டு இறைமையுள்ள நாட்டின் மீது ஐ.நா.வினால் பயன்படுத்த முடியாது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

சிவில் அமைப்புகளை இந்த அரசாங்கம் துரோகிகளாக பார்ப்பதாக எம்.பியொருவர் கூறியுள்ளார். ஆனால் நாங்கள் அவ்வாறு பார்ப்பதில்லை. அவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் அந்த அமைப்புகளை சனிக்கிழமை சந்திக்கவுள்ளோம்.

## இலங்கையை புறக்கணித்த ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கேற்கும் நாடுகளின் பட்டியல் குறிப்பிடுகிறது.

அமெரிக்கா தலைமையில் ஜனநாயகம் என்ற தலைப்பிலான மாநாடு டிசம்பர் .9, 10ல் நடக்கிறது. ஜனநாயக நாடுகளுக்கான சவால்கள், வாய்ப்புகள், அதனை எதிர்கொள்ளுதல், ஊழலுக்கு எதிராகவும், மனித உரிமைகள் உள்ளிட்டவை தொடர்பாகவும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

## நாங்கள் அடித்தால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொள்ள வேண்டுமென்றால் வருமாறு கூறுகின்றனர். அடித்தால் நாங்கள் திரும்பியடிப்பதில்லை. நாங்கள் அப்பாவிகள். ஆனால் நாங்கள் அடித்தால் வேறு விதமாகவே அடிப்போம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எம்.பி.யுமான மைத்திரிபால சிறிசேன அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

பொதுஜன பெரமுன அரசின் விவசாய அமைச்சரான மஹிந்தானந்த அளுத்கமகே செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி செலவீனத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எம்.பி.யுமான தன் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை பதிலளிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்த மைத்திரிபால சிறிசேன மேலும் கூறுகையில்,

விவசாய அமைச்சர் இந்த சபையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் நான் பதிலளித்திருந்தேன். நான் மூன்று வீடுகளை ஒன்றிணைத்து வசிப்பதாக கூறிய விடயம் தொடர்பிலேயே நான் பதிலளித்திருந்தேன். அதன்போது அதனை நிரூபித்தால் நான் எம்.பி பதவியில் இருந்து விலகுவதாகவும் நான் சவால் விடுத்தேன். ஆனால் இன்று வரையில் அதனை நிரூபிக்க முடியவில்லை.

இதேவேளை வரவு செலவுத் திட்டத்தின் ஜனாதிபதியின் செலவீனங்கள் தொடர்பான விவாதத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி 200 வாகனங்களை பயன்படுத்தினார் என்றும், அவரின் வருடாந்த செலவு 3.5 பில்லியன் ரூபா என்றும் கூறியிருந்தார். அவ்வாறு 200 வாகனங்களை பயன்படுத்தியிருந்தால் ஒவ்வொரு வாகனமாக பயன்படுத்துவதற்கு 200 நாட்கள் எடுக்கும். அது முற்றிலும் பொய்யாகும். எனக்கு நான்கு வாகனங்களே ஒதுக்கப்பட்டிருந்தன .

இதேவேளை எனது காலத்தில் 3.5 பில்லியன் ரூபா செலவு என்றும், தற்போதைய ஜனாதிபதியின் 2020 ஆம் ஆண்டின் செலவு 1.5 பில்லியன் ரூபா எனவும், இதன்படி நான் அதிகளவில் நிதியை செலவழித்துள்ளதாகவும் கூறப்பட்டது. எனது பதவிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்தினால் 7 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த வேலைத்திட்டங்கள் இப்போது செயற்படுத்தப்படுவதில்லை. தேசிய சுற்றாடல் பாதுகாப்பு, போதைப் பொருள் ஒழிப்பு, ஸ்மார்ட் ஸ்ரீலங்கா, தேசிய சிறுநீரக நோய் தொடர்பான வேலைத்திட்டங்கள் உள்ளிட்டவை செயற்படுத்தப்பட்டன. அதற்காகவே இவை செலவழிக்கப்பட்டன. இந்நிலையில் நான் அரசின் எம்.பி என்ற வகையில் அரசின் அமைச்சரே இவ்வாறு கதைப்பது தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

சபை முதல்வர், ஆளும் கட்சி பிரதம கொரடா ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் நாங்கள் 14 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளோம்.

இப்படி இருக்கையில் அரசில் உள்ளவர்களே இவ்வாறு பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டாம். இதனை இழுத்துச் செல்லாது இருக்கவே நாங்கள் 14 பேரும் அண்மையில் கூடி இது தொடர்பில் சபையில் குறிப்பிட தீர்மானித்துள்ளோம். இதனால் இவ்வாறு சேறு பூசும் பிரசாரங்களுக்கு இடமளிக்க வேண்டாம் .

அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வேகமாகவும் உணர்ச்சிவசமாகவும் உரையாற்றினார். முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி தொடர்பாக கூறினால் அதற்கு பதிலளிக்க எனக்கு உரிமையுள்ளது. அடித்தால் நாங்கள் திரும்பியடிப்பதில்லை. பாவம்தான் பார்ப்போம். அவ்வாறு அடித்துக் கொள்ளும் மனிதர்கள் அல்ல. நாங்கள் அப்பாவிகள்.ஆனால் நாங்கள் அடித்தால் வேறு விதமாகவே அடிப்போம் என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## அரசுக்கு தயாசிறி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பி.யுமான மைத்திரிபால சிறிசேன தொடர்பில் பொதுஜன பெரமுன அரசின் விவசாய அமைச்சரான மஹிந்தானந்த அளுத்கமகே செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி செலவீனத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைக்கையிலேயே இவ்வாறு எச்சரித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர மேலும் கூறுகையில்,

இதற்கு முன்னர் மகிந்தானந்த அளுத்கமகே மைத்திரிபால சிறிசேனவின் வீடு தொடர்பாக பேசிய விடயம் பின்னர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ரோஹித அபேகுணவர்தன மீண்டும் அதனை கூறியிருந்தார். பின்னர் நேற்று (நேற்று முன்தினம்) மகிந்தானந்த அளுத்கமகே, 3.7 பில்லியன் ரூபா முன்னாள் ஜனாதிபதிக்கு ஒதுக்கியிருந்ததாக கூறியுள்ளார். இது பிரச்சினையே. இதற்கு பதிலளிக்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டில் பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக கிராம சக்தி, சிறுநீரக நோய் குணப்படுத்தல் ஆகியவற்றுக்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டன. ஆனால் அந்த திட்டங்களுக்கான நிதி இப்போது ஜனாதிபதியின் கீழ் ஒதுக்கப்படுவதில்லை. அத்துடன் ஜனாதிபதியின் நிதியை பல்வேறு ஆணைக்குழுக்களுக்காகவும் ஒதுக்கியிருந்தார்.

21 தடவைகள் நாட்டின் அரசியலமைப்பை மாற்றியுள்ளனர். அவ்வாறு மாற்றிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது அதிகாரத்தை அதிகரிக்கவும், இல்லாவிட்டால் மூன்றாவது, நான்காவது தடவையாக போட்டியிடவும் என்றுமே பயன்படுத்தினர். ஆனால் மைத்ரிபாலா சிறிசேன 2015 ஆம் ஆண்டில் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கும் பிரதமருக்கும் வழங்கியிருந்தார். தமது அதிகாரத்தை மக்களிடையே பகிர்ந்திருந்தார். அதன்மூலமே 2018 இல் மகிந்தவை பிரதமராக்கினார்.

மகிந்தானந்த அளுத்கமகே ஜனாதிபதியிடம் 200 வாகனங்கள் இருந்தன என்று கூறியதுடன், ரோஹித அபே குணவர்தன 380 வாகனங்கள் இருந்ததாக கூறியுள்ளார். இதில் எது சரியென கேட்கின்றோம். இப்போதுள்ள ஜனாதிபதி 3 வாகனங்களையே பயன்படுத்துகின்றார். ஆனால் வாகன அணியொன்று ஜனாதிபதி, பிரதமருக்கென இருக்கின்றன. கொழும்பில் இருந்தால் மூன்று வாகனங்கள் செல்லும் அதே போன்று தங்காலை உள்ளிட்ட வெளியிடங்களில் இருந்தால் அங்கேயும் மூன்று மூன்று வாகனங்கள் செல்லும். இதனை புரிந்து கொண்டு கதையுங்கள். இதனை கதைக்க வந்தால் எங்களிடம் பல விடயங்கள் இருக்கின்றன.

மகிந்தனந்த அளுத்கமகே இவ்வாறு கூறுவது இது முதற்தடவையல்ல. ஒரு தடவை இரண்டு தடவையென்றால் பிரச்சினையில்லை. இந்த அரசாங்கத்தில் 14 உறுப்பினர்களை கொண்ட கட்சியின் தலைவர் மீதே சேறு பூசுகின்றனர். மகிந்தானந்த முன்னால் மயில் போன்று ஆடினாலும். பின்பக்கத்தை வெளியிலேயே வைத்துக் கொண்டு இருக்கின்றார்.

அரசாங்கத்தின் பங்காளிகள் என்ற வகையில் இந்த அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் கதைப்பதை போன்று நாங்கள் சில விடயங்கள் தொடர்பில் கதைத்துள்ளோம். அடிப்பதென்றால் எங்கள் மீது தாக்குதல் நடத்துங்கள். ஆனால் கட்சித் தலைவர் மீது தாக்குதல் நடத்தி இந்த செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்ல முயன்றால் இது பாரிய நெருக்கடிக்குள் செல்லும் என்பதனை இறுதி எச்சரிக்கையாக கூறுகின்றேன் என்றார்.

## பங்காளிகளுக்குள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுன அரசின் பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தொடர்பாக, பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சுமத்திய குற்றச்சாட்டையடுத்தே பங்காளிகள் மோதல் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக வெடித்தது.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நிலையில் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளருமான தயாசிறி ஜெயசேகர விசேட கூற்றை முன்வைத்து அமைச்சர் மஹிந்தானந்த மைத்திரிபால சிறிசேன மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்தபோது, இவ்வாறான கூற்றுக்களை முன்வைக்க இது சரியான நேரமல்ல என குறிப்பிட்டே சபாநாயகர் பிரச்சினையை தவிர்க்க முற்பட்டார்.

இதன்போது எழுந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன, தன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசுக்கான, அமைச்சருக்கான எச்சரிக்கைகளுடன் பதிலடி வழங்கியதுடன் அரசு பெரும்பான்மையை இழக்க வேண்டி வரும் என்ற எச்சரிக்கையையும் விடுத்தார்.

இதனைத்தொடர்ந்து இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளருமான தயாசிறி ஜெயசேகரவும் அரசையும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயையும் கடுமையாக விமர்சித்தார்.எச்சரித்தார். அரசின் துரோகத்தனங்களையும் மைத்திரிபாலசிறிசேனாவின் விட்டுக்கொடுப்பு பொறுமையையும் அவர் பட்டியலிட்டார்.

இந்நிலையில், தமது கருத்தை வெளியிட்ட சபை முதல்வரான தினேஸ் குணவர்த்தன, ஆளும் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்று குறிப்பிட்டதுடன் அமைச்சர் மஹிந்தானந்த சபையில் இல்லாத நேரம் இவ்வாறான கூற்றை வெளியிட்டிருக்கக்கூடாது என்றும் கூறினார்.

இதன் பின்னர் சபைக்குள் வந்த மஹிந்தானந்த அழுத்தகமே அமைச்சு மீதான தனது விவாத நேரத் தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் இராஜாங்க மச்சர் தயாசிறி ஜெயசேகரவையும் கடுமையாக விமர்சித்ததுடன் மீண்டும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன் நீங்கள் தாக்கினால் பதிலடி வழங்க நாங்களும் தயார் என்றும் சவால் விடுத்தார்.

இந்நிலையில் மீண்டும் எழுந்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரி பல சிறிசேன அரசுக்கான, அமைச்சருக்கான எச்சரிக்கைகளுடன் மீண்டும் பதிலடி வழங்கினார்.

பொதுஜன பெரமுன அரசுக்கும் அதன் பிரதான பங்காளிக்கும் சபையில் பகிரங்க மோதல் வெடித்த நிலையில் பொதுஜன பெரமுன அரசின் ஏனைய அமைச்சர்களோ இராஜாங்க அமைச்சர்களோ எம்.பி.க்களோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏனைய எம்.பி.க்களோ வாய் திறக்கவில்லை. அதேவேளை எதிர்க்கட்சியினர் இந்த பங்காளிகளின் பகிரங்க மோதலை வேடிக்கை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

## யாழில் வைத்தியசேவைகள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)


போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்தார். இது தொடர்பில்அவர் மேலும் தெரிவிக்கையில்

கடந்த இரு நாட்களாக மருத்துவ தாதியர்கள் மருத்தியலாளர்கள் துணை மருத்துவ உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகிஷ்கரிப்பால் நோயாளர்கள் கடந்த இரு தினங்களாக பெரும் அவலத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போது பொருளாதாரம் கீழ் நிலையில் காணப்படும் நிலையில் இவர்களின் பணிப் பகிஷ்கரிப்பால் அப்பாவி பொதுமக்களே பெரும் பாதிப்பை எதிர் கொள்வதாக யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்தார். (30)

# சீரற்ற காலநிலையினால் 632 பேர் பாதிப்பு;4 வீடுகள் சேதம்



தற்போது நிலவிவரும் சீரற்ற கால நிலை காரணமாக 183 குடும்பங்களைச் சேர்ந்த 632பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் பெய்து வரும் மழை மற்றும் பலமான காற்று காரணமாக 183 குடும்பங்களைச் சேர்ந்த 632 பேர்; பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் வெள்ளம் காரணமாக காரைநகர் பகுதியில் இரண்டு குடும்பத்தை சேர்ந்த 8 பேர் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் காரைநகரில் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளை யாழ் மாவட்ட அனர்த்த முகாமை பிரிவினர் நேரடியாக களம் சென்று அங்குள்ள நிலைமை தொடர்பில் ஆராய்ந்தனர். (40)


## படகுப்பாதை விபத்தில் பலியானவர்களுக்கு கிண்ணியாவில் துக்க தினம் அனுஷ்டிப்பு

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபங்களை தெரிவித்தும் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைய வேண்டியும் நேற்று வியாழக்கிழமை துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச சிவில் அமைப்புகளின் ஒன்றியம் விடுத்த அழைப்புக்கு அமைவாக இடம்பெற்ற இந்த துக்க தினத்தின் போது கிண்ணியாவிலுள்ள அனைத்து வீடுகள், கடைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வெள்ளை கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அத்துடன் பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டிருந்தன.

இது இவ்வாறிருக்க கிண்ணியா பிரதேச சிவில் அமைப்புகளின் ஒன்றியம், பள்ளிவாயில்கள் சம்மேளனம், உலமா சபை, ஷிரா சபை மற்றும் வர்த்தக சங்கங்கள் ஆகியன துக்க தினத்தை பிரார்த்தனையுடன் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தன. இந்நிலையில் துக்க தினம் அமைதியான முறையில் இடம்பெற்றது. இதேவேளை படகுப்பாதை சேவையை முன்னெடுத்தமை தொடர்பில் படகுப்பாதையின் உரிமையாளர், அதனை செலுத்துபவர் மற்றும் போக்குவரத்து கட்டணம் அறவிடும் நபர் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில்; அவர்களை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

## சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேசசபை ஏற்படுத்தப்பட வேண்டும்



இனவாதிகளால் தடுக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட, சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேசசபை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபைகள் நாட்டுக்கு பெரும் சுமையாக உள்ளதால் புதிய அரசியலமைப்பின் ஊடாக அவை இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டு மேலும் கருத்து வெளியிடுகையில்:

கிண்ணியா-குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் யாரையும் குறை சொல்லும் நோக்கம் எமக்கு இல்லை. எனினும் மாகாண சபைகளுக்கு கீழ் உள்ள கிண்ணியா நகரசபை, பிரதேசசபையால் இந்த படகு சேவையை பாதுகாப்பாக முன்னெடுக்க முடியாமை தொடர்பில் கவலையடைகிறேன்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு, பின்னர் இனவாதிகளால் தடுக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேசசபை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை தேவையற்றது. இது நாட்டுக்கு சுமையாகவுள்ளது. இதற்கு மக்களின் பணம் வீணாக செலவிடப்படுகிறது. பிரித்தானியர் காலத்தில் இருந்தே நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கும் அரசியலமைப்பு ஊடாக உரிமைகள் பகிரப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கு தேவையானதை வழங்க முடியுமாக இருந்தால், முஸ்லிம்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட நாட்டில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமாக இருந்தால் எதற்காக நாட்டில் மாகாணசபைகள் என கேட்கின்றேன். ஒரே நாடு, ஒரே சட்டம் என்கின்றனர். மாகாண சபைகளில் 10 சட்டங்கள் இருக்கின்றன. மாகாண சபைகளை இல்லாதொழித்து நாட்டுக்கு தேவையான சிறந்த அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோருகிறேன் என்றார்.

## நெடுந்தீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவு

யாழ்.மாவட்டத்தில் நெடுந்தீவில் கடந்த 24 மணி நேரத்தில் அதி கூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாழமுக்கம் காரணமாக நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் பருத்தித்துறையில் 55.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் அதேபோல அச்சுவேலியில் 53.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பெய்துள்ளது. அத்துடன் நயினாதீவில் 53 மில்லிமீற்றரும், யாழ். கோட்டைப் பகுதியில் 48.8 மில்லிமீற்றரும், சாவகச்சேரியில் 40 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. இந்நிலையில் நெடுந்தீவில் 64.9 மில்லிமீற்றர் அதி கூடிய மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.(18)

## அமைச்சர் பீரிஸுக்கு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா கிரியெல்ல புகழாரம்

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

பேச்சின் மூலம் சர்வதேசத்தை ஏமாற்றும் திறமையுள்ள பேராசிரியர் பீரிஸுக்கு பொருத்தமான அமைச்சு வழங்கப்பட்டுள்ளதென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வெளிநாட்டு அமைச்சு,பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், இன்று ( நேற்று) வெளிநாட்டு அமைச்சு மீதான விவாதம் இடம்பெறுகின்றது. முதலில் நான் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் பீரிஸுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புகின்றேன். ஏனெனில் தனது பேச்சு வல்லமை மூலம் சர்வதேசத்தை ஏமாற்றும் திறமை கொண்ட பீரிஸுக்கு பொருத்தமான அமைச்சு வழங்கப்பட்டுள்ளமைக்கே எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

எனினும் நாம் சர்வதேச சட்டங்களை தொடர்ந்தும் மீறும்போது புத்திசாலியான பேராசிரியர் அமைச்சர் பீரிஸால் கூட சர்வதேசத்தை ஏமாற்றுவது கடினம் என்பதனையும் கூற விரும்புகின்றேன் என்றார்.

## 208 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது; உபகரணங்கள் மீட்பு



கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் கட்டைகாடு பகுதியில் 208 போத்தல் கசிப்பு,3000 லீற்றர் கோடா மற்றும் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கைதாகியுள்ளார்.(55)

## நேற்று 27 கொரோனா மரணம்; 529 பேருக்கு கொரோனா தொற்று

நாட்டில் நேற்றைய தினம் மேலும் 529 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்று நபர்களின் எண்ணிக்கை 559,605 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 27 பேர் உயிரிழந்துள்ளனர். அதன்படி, நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14,232 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொவிட் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 528,400ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஏ.ரி.எம் இயந்திரங்களில் பொதுமக்களிடம் மோசடி செய்யும் கும்பல்

### -பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை-

ஹட்டன் நகரப் பகுதியிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி இயந்திரங்களின் (ஏ.ரி.எம்) மூலம் பணம் எடுக்க வருபவர்களின் இலத்திரனியல் அட்டைகளைக் கொண்டு, பல லட்சம் ரூபாவை மோசடி செய்த கும்பல் குறித்து எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

குறித்த மோசடிக் கும்பல், நீண்ட காலமாக மிகவும் சூட்சுமமான முறையில் இயந்திரத்தில் பணம் எடுக்கத் தெரியாத மற்றும் பணம் எடுக்கத் தடுமாறும் நபர்களை இலக்காக கொண்டே, இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் மேலும், தானியக்க இயந்திரங்களில் பணம் எடுப்பவர்கள் போல பாவனை செய்து நிற்கும் குறித்த மோசடிக் கும்பல், இயந்திரங்களில் பணம் எடுக்கத் தெரியாதவர்கள் உதவி கேட்கும் போது, அவர்களின் அட்டையை எடுத்துக்கொண்டு, தம்மிடமுள்ள செல்லுபடியாகாத அட்டையை அவர்களிடம் வழங்குகின்றனர்.

பின்னர் வேறு வங்கி இயந்திரங்களுக்குச் சென்று, உரிய நபரின் கணக்கில் உள்ள பணத்தை திருடிவருவதாக, பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. நேற்று முன்தினமும் இரு வங்கிகளில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது.

இவ்வாறான கும்பல் நாட்டில் பல பகுதிகளிலும் தானியங்கி இயந்திரங்கள் மற்றும் ஈசிகேஸ் என்ற போர்வையிலும் மோசடியில் ஈடுபட்டு வருவதனால், பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென, வங்கி முகாமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹட்டனில் கையகப்படுத்திக் கொண்ட இலத்திரனியல் அட்டைகள் மூலம் நாட்டின் தூர உள்ள மாவட்டங்களிலுள்ள தானியங்கி இயந்திரங்களில் பணம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், எனவே பொதுவாக எல்லா மாவட்டங்களிலும், உள்ள பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமெனவும், வலியுறுத்தப்பட்டுள்ளது.

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகனின் தந்தை காலமானார்



யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தீவக பொறுப்பாளரும் ஆகிய வேலும்மயிலும் குகேந்திரனின் (ஜெகன்) தந்தையார் கார்த்திகேசு வேலும்மயிலும் (ஓய்வு பெற்ற அதிபர்) நேற்று இயற்கை எய்தியுள்ளார்.

இவரின் இறுதிச் சடங்கு தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## கிண்ணியாவில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர் மீது தாக்குதல்

கிண்ணியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டச் செய்தியை சேகரிக்க சென்ற தனியார் தொலைக்காட்சி ஊடகவியலாளர் தாக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியாவில் தள வைத்திய சாலைக்கு முன்னால் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டச் செய்தியை சேகரிக்கச் சென்ற சக்தி தனியார் தொலைக்காட்சி ஊடகவியலாளரான எச்.எம்.ஹலால்தீன் மீது அங்கு நின்றவர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர்;.அத்துடன் அவரது கமராவும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவத்தினரால் அவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

## பருத்தித்துறை நகரசபையைச் சேர்ந்த 17 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

பருத்தித்துறை நகர சபை தவிசாளர், உறுப்பினர்கள், மற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக 17 பேர் நேற்று முன்தினம் புதன்கிழமை (24) தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நகரசபையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு- செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரொருவர் காய்ச்சலுடன் கலந்து கொண்டிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.இதையடுத்தே அந்த அமர்வில் கலந்து கொண்ட 14 உறுப்பினர்களுடன், ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர், மற்றும் ஒரு எழுதுநர் ஆகியோர் தனிமைப்;படுத்தப்பட்டுள்ளனர்.(21,44)



நெடுந்தீவு மேற்கு ஸ்ரீஸ்கந்த வித்தியாலய பாடசாலை தோட்டம் அங்குரார்ப்பண நிகழ்வும் நெடுந்தீவு மேற்கு ஜே-02 கிராம சேவகர் பிரிவில் உள்ள சிறுவர்களுக்கான மரக்கன்று வழங்கல் நிகழ்வும் நேற்று நெடுந்தீவு தெற்கு விவசாயிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வுக்கான மரக்கன்றுகளை சபரீஸ் அறக்கட்டளை நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (30)

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
வெள்ளிக்கிழமை 26 நவம்பர் 2021 Friday 26th November 2021

# தொழில் வாய்ப்பை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிப்பது அவசரத்தேவை

உலகை கடந்த இரண்டு ஆண்டுகளாக அதலபாதாளத்திற்குள் தள்ளிவிட்டுகொண்டிருக்கும்கொரோனா வைரஸ் தொற்றுநோய் இலங்கையில் 150,000 வேலைகளைக் குறைத்துள்ளதால், இளைஞர்கள் மற்றும் நடுத்தரத் திறன் கொண்டதொழிலாளர்கள் அதிகளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் வேலையின்மை வீதம் 2020 டிசம்பர் காலாண்டில் 5.2 சதவீதத்தை எட்டியிருந்தது. இந்த காலாண்டில் இலங்கையில் 442,000 பேர் தொழில் இல்லாமல்இருகின்றனர். தொகைமதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வத் தரவுகளின் பிரகாரம் , பிரதானமாக தனியார் துறை உற்பத்தி மற்றும் சேவைதுறைகளில் வேலைவாய்ப்பு 1.8 சதவீதம் (அல்லது 150,209 வேலைகள்) குறைந்துள்ளதை காட்டுகிறது.தற்போதைய சூழ்நிலையில் இளைஞர், யுவதிகளுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பை உருவாக்குவது மிகப்பாரிய சவாலாககாணப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் வேலையின்மை 0.7 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அரசாங்க தரவுகள் தெரிவிக்கின்றன.15-24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மற்றும் நடுத்தர திறன் கொண்டவர்களிடையே வேலையின்மை 4.5 சதவீதமும், 24-29 வயதுடையவர்களில் 2 சதவீதமும் அதிகரித்திருக்கிறது

தொற்றுநோய்நாட்டின் சகல துறைகளிலும் கடுமையான சவால்களைக் கொண்டு வந்துள்ளது. சமீபத்திய ஆண்டுகளில், நாடு போதுமான வேலை வாய்ப்பை உருவாக்கவில்லை,நாடு முன்னேற வேண்டுமானால் வேலைவாய்ப்பில் கவனம் செலுத்த வேண்டும்.எதிர்கால சந்ததியினரின் திறன்களை அழித்துவிடாமல் அவர்களுக்கு சரியான முறையில் கல்வி கற்பிப்பது அனைவரின் பொறுப்பாகும். தரமான கல்விக்கு ஆசிரியர்கள் பொறுப்பாக இருப்பது போல், பெற்றோர்களுக்கும், சிவில் சமூகத்திற்கும் முக்கியப் பங்கு உள்ளது. அரசாங்கத்திற்கு மட்டுமல்லாமல் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.உண்மையில் வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது பாரியதொரு சவாலாகும். அதேவேளை சந்தை தேவைக்கு ஏற்ப கல்வி முறை மை இல்லாவிடினும் படித்த வேலையற்றோர் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்துவிடும் .

தொழில் சந்தையில் திறமையும் கல்வித்தகைமையும் உள்ள தொழிலாளர்களின் தேவையை கல்வி முறையால் பூர்த்தி செய்ய முடியவில்லையெனில் அது தொடர்பாக கொள்கை திட்டமிடல் நிபுணர்கள் ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதற்கு ஆலோசனைகளைவழங்கவேண்டும். பல்கலைக் கழகங்களில், படிப்பை பூர்த்திசெய்த இளைஞர்களுக்கு,விசேட பயிற்சிகள் இல்லாததால்,தொழில்சந்தையின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.அதனால் பட்டதாரிகள் குறிப்பாக கலைப்பட்டதாரிகள் அதிகளவில் வேலைவாய்ப்பின்றி உள்ளனர், தற்போதையசூழலில் தகவல் தொழில்நுட்பம், விவசாயத்துறைசுற்றுலா மற்றும் சுற்றுலா சேவைகள், கட்டுமானம் ஆகிய துறைகளில் அதிகளவு தொழில்வாய்ப்புகளை உருவாக்கவேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது. இதற்கு எந்த மாதிரியான திறமையான அலுவலர்கள் தேவை என்பதை அடிப்படையாக கொண்டு பாடத்திட்டத்தை உருவாக்குவது முக்கியம். இளைஞர்களின் வேலையில்லாப்பிரச்சினையை பொருளாதாரத்தில் உருவாகி வரும் பிரச்சனையாக கொள்கைகளில்முன்னுரிமைகொடுத்து அங்கீகரிக்க வேண்டும். வரவு செலவுத்திட்டதில் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான உறுதியான செயல் திட்டம் எதுவும் இல்லையென பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் .

அதேசமயம் பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்களிப்பு அதிகமாக இருப்பதால், வேலைவாய்ப்பின் முக்கிய ஆதாரம் தனியார் துறையாக இருக்க வேண்டும். அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் கொள்கைரீதியான ஆதரவை வழங்க வேண்டும். தற்போதைய பாடத்திட்டத்தை சந்தை தேவைக்கேற்ப புதுப்பிக்க வேண்டும். சட்டமியற்றுபவர்கள், தொழில் வழங்குநர் கல்விமான்களை ஒருங்கிணைத்து அரசாங்கம் தேவையான திட்டங்களை வகுக்க வேண்டும். சிறந்த கல்வி மட்டுமல்ல, விழிப்புணர்வும் அர்ப்பணிப்பும் மிகவும் அவசியம். இளைய சமூகத்துக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது மிகவும் முக்கியமான விடயம். இதற்காக பட்ஜெட்டில் வேலை வாய்ப்பை உருவாக்க விசேட ஒதுக்கீடு செய்ய வேண்டும். அத்துடன் பல்வேறு வழிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும் செயற்பாட்டில் வரவுசெலவுத்திட்டத்தை பயனுள்ள வழியாகப் பயன்படுத்தமுடியும். உள்கட்டமைப்பு திட்டங்கள், வீதிகள் விரிவாக்கம்உட்பட பலவற்றில்முதலீடு செய்வது தொழிலாளர்களின் வெவ்வேறு பிரிவுகளுக்குதொழில் வாய்ப்பை உருவாக்குகிறது. வேலைவாய்ப்பின்மை எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றத்தைத் தடுத்துவிடுமென்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

## எங்களுக்கு அடித்தால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழிகளை தோண்டினால் நாற்றம் அதிகரிக்கும் என்று கூறியிருந்தார். அப்படி தோண்டினால் அப்படி நாற்றம் வரும்தான். அர்ஜுன அலோசியஸின் காசோலை உள்ளிட்ட பல விடயங்கள் வெளியே வரும். இது தொடர்பில் நான் மேலும் கூற விரும்பவில்லை.

ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தின் போது, முன்னாள் ஜனாதிபதியினதும், தற்போதைய ஜனாதிபதியினதும் முன்னாள் ஜனாதிபதியினதும் செலவீனங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக கூறினேன். 2019 இல் இருந்த ஜனாதிபதியின் செயலகத்திற்கான ஒதுக்கீடாக 3.%3 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய ஜனாதிபதியின் செயலகத்திற்கான ஒதுக்கீடாக 1.2 பில்லியன் ரூபா இருப்பதாக நான் கூறினேன். பயணங்கள், வெளிநாட்டு பயணங்கள், வாகன பராமரிப்பு, எரிபொருள், போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு ஜனாதிபதிகளினதும் செலவீன ஒதுக்கீடு தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன்.

எமது ஜனாதிபதியின் முன்மாதிரியான நடவடிக்கை தொடர்பிலேயே கூறியிருந்தேன். இதனை சுட்டிக்காட்டுவதற்கு யாருடைய அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. எனக்கு எமது ஜனாதிபதி பற்றி கூற உரிமை உள்ளது. எமது ஜனாதிபதி முன்னாள் ஜனாதிபதியை விடவும் 1.% பில்லியன் ரூபாவை சேமித்துள்ள நிலையில் அது தொடர்பாக கூறியிருந்தேன்.

இதேவேளை வீடு தொடர்பில் நான் அரச நிருவாக செயலாளரிடம் கடிதமொன்றை அனுப்பி கேட்டிருந்தேன். இது தொடர்பில் இதற்கு முன்னர் நான் பேசியிருக்கவில்லை. அதனால் இது தொடர்பாக இங்கு கூறியிருந்தமையினால் நான் அதனை சபையில் சமர்ப் பிக்கின்றேன். எந்தக் கட்சி தலைவரையும், எந்த நபரையும் தாக்குவதற்கு எங்களுக்கு தேவையில்லை. வெளியில் சென்று வீரர்களாக இருக்க முடியாது. ஆனால் எங்களை தாக்கினால் நாங்களும் தாக்குவோம். முதுகெலும்பை பின்னால் வைத்துக்கொண்டு முடியாதவன் என்று இருக்க முடியாது. ரணில் விக்கிரமசிங்கவை முன்னால் வைத்துக்கொண்டு கூறியிருந்தேன்.

கோப் குழுவுக்கு அலோசியஸை கொண்டு வர முயன்ற போது அதற்கு இடமளிக்கப்படவில்லை. நான்தான் நேர்மையாக இருந்தேன். நானே சபாநாயகர் அலுவலகத்திற்கு சென்று சண்டையிட்டேன். இதனால் மகிந்தானந்தவினாலேயே அவர்களை கோப் குழுவுக்கு கொண்டு வர முடிந்தது.இதனை நாங்கள் கூறாது இருக்கின்றோம். இந்நிலையில் முன்னாள் மற்றும் தற்போதைய ஜனாதிபதிகளின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் நாங்கள் ஒப்பிட்டு பார்த்தோம். இதனை கூற வேண்டும். எங்களுக்கு அடித்தால் நாங்களும் திரும்பியடிப்போம். இருந்தாலும் ஒன்று இல்லாவிட்டாலும் ஒன்று. நாங்களும் திருப்பியடிப்போம். நாங்கள் தவறு செய்யவில்லை. நான் சபையில் இருக்கும் நேரத்தில் கூறியிருக்கலாம்.

நான் விவசாய அமைச்சராக எந்த விவாதத்திற்கும் வரலாம்.

தனிப்பட்ட ரீதியில் முன்னாள் ஜனாதிபதிக்கும், தயாசிறிக்கும் தாக்க வேண்டிய அவசியமில்லை. நான் எனது ஜனாதிபதியினதும், முன்னாள் ஜனாதிபதியினதும் நிதி ஒதுக்கீட்டை ஒப்பிட்டு பார்க்க உரிமை உள்ளது. அதனையே செய்துள்ளேன்.

நான் விவாசய அமைச்சர் என்ற ரீதியில் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தையே முன்னெடுக்கின்றேன் எனது கொடும்பாவியை மட்டுமல்ல எனது வீட்டை எரித்தாலும் இந்தத் தீர்மானத்தில் இருப்பேன். சில கட்சிகள் விவசாயிகளின் பின்னால் போகின்றன. கடந்த ஆர்ப்பாட்டங்களின் போது அரிசி ஆலை உரிமையாளர்கள் பணம் கொடுத்துள்ளனர். அதற்கு அப்பால் சென்றால் என் வாயில் என்ன வருமென தெரியாது.

தனிப்பட்ட மோதல்களுக்கு செல்ல நான் விரும்பவில்லை. நான் கூறிய கருத்துக்களில் தவறு இருந்தால் காட்டுங்கள் நான் மன்னிப்புக் கோர தயார். அரசாங்கம் என்றால் நாங்கள் ஒன்றாக இருக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தில் ஒன்றாக இருக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி இந்த இடத்தில் பொய்யொன்றை கூறியுள்ளார். துமிந்த திஸாநாயக்கவிடம் நான் குறிப்பிட்டதாக கூறியுள்ளார். ஆனால் ஜனாதிபதியை உற்சாகப்படுத்த நான் கூறியதாக அவர் கூறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். நான் அரசாங்கத்தின் கொள்கையிலேயே இருக்கின்றேன். வேண்டுமென்றால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலும் கூற முடியும். அதற்கு அப்பால் செல்லமாட்டேன். விவசாய அமைச்சர் என்ற வகையில் நான் பொறுப்பேற்றுள்ளேன். நான் பொய் கூறியதாக குறிப்பிட்டுள்ளார். நான் கொள்கை ரீதியில் இருந்தேன். நான் பிரதமரை வைத்து பிரதமரின் காலைப் பிடித்து இழுக்கவில்லை என்றார்.

## மார்ச் மாதமளவில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. யும் எதிர்க்கட்சிகளின் கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்ததுடன் அவ் மேலும் கூறுகையில்,

இந்த அரசு ஆட்சிக்குவந்த அனைத்து காலங்களிலும் சர்வதேசத்துடன் முரண்பட்டே வந்திருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2012,2013,2014 காலப்பகுதியில் தொடந்து மூன்று தடவைகள் ஐக்கிய நாடுகள் சபை எமது நாட்டுக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்திருந்தது.

தற்போது கோத்தபாய ராஜபக்ச அரசும் மஹிந்த ராஜபக்ஷ சென்ற வழியிலேயே செல்கின்றது. இந்த அரசின் முதலாவது வருடம் ஐ. நா. மனித உரிமை பேரவை எமக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்தது. அதில் நாங்கள் பாரியளவில் தோல்வியடைந்தோம். மத்திய கிழக்கு நாடுகளும் எமக்கு எதிராக வாக்களித்திருந்தன. அதனால் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அடுத்த முறை மனித உரிமை பேரவைக்கு செல்லும்போது எமக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தவேண்டும்.

எமது நாடு மீதான அவர்களின் குற்றச்சாட்டாக சிவில் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரை நியமிப்பதே இருந்தது. ஏனைய நாடுகள் கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் தலைவராக மருத்துவர் ஒருவரை நியமிக்கும்போது எமது நாட்டில் இராணுவ தளபதியே அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார். அதனால் இதற்கு பதிலளிக்க தயாராகியே அடுத்த கட்டத்துக்கு செல்லவேண்டும்.

அடுத்ததாக நீதிமன்ற சுயாதீனத்தை பாதுகாக்கவேண்டும். 20ஆவது திருத்தம் மூலம் நீதிமன்ற சுயாதீனம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் புதிய அரசியலமைப்பினூடாக சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றாவது அமைச்சர் மனித உரிமை பேரவைக்கு தெரிவிக்க வேண்டும். சுயாதீன நீதிமன்றம் அமையாமல் வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்க்கமுடியாது. அதேவேளை இலங்கையின் மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவராக அரசின் உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். எனவே இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவில் நம்பிக்கை ஏற்படுவதில்லை. அதேபோன்று சிறுபான்மை சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகளும் நாட்டுக்கு எதிராகவே உள்ளன. இது அந்த சமூகத்துக்கு வழங்கும் தண்டனை. முஸ்லிம் மக்கள் பல நூறு வருடங்கள் எம்முடன் இணைந்து வாழ்பவர்கள். இதேவேளை நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. அதனால் எமது கடன் தவணைகளை நீடித்துக் கொள்ள சர்வதேசத்துடன் கலந்துரையாடவேண்டும். இந்த நிலை நீடித்தால் மார்ச் மாதமாகும்போது சிவில் யுத்தம் ஒன்று ஏற்படுவதனை யாராலும் தடுக்க முடியாது என்றார்.

## இந்தியாவின் விருப்பத்துக்கு மாறாகவே... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதினால் அது ஒருபோதும் வெற்றிபெறாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு,பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் வெளிவிவகார கொள்கையில் தேசிய வேலைத்திட்டம் உள்வாங்கப்படுவது அவசியம்.ஆனால் இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் பௌத்த,சிங்கள கொள்கையில் பயணித்து, சிங்கள பௌத்த அடையாளத்தை வெளிப்படுத்தவே முனைகின்றனர். அதன் விளைவாக உள்நாட்டிலேயே எதிரிகளை உருவாக்கிக் கொண்டுள்ளன. இதற்கு தமிழர்கள் பிரதான இலக்காகியதுடன், இன்று முஸ்லிம்கள் , கிறிஸ்தவர்களும் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொள்கையில் அரசு பயணிப்பதால் இந்த நாட்டின் தமிழர்கள், தென்னிந்திய தமிழர்களுடன் இணையும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனால் இலங்கையை இந்தியா ஆக்கிரமிக்கிறது என்ற நோக்கத்தில் பார்க்கும் மனநிலையும் உருவாக்கப்பட்டது. இவ்வாறான சூழலால் இந்தியாவையும் எதிரி என நினைக்கும் நிலை ஆரம்பத்திலேயே உருவாகிவிட்டது. ஆகவே இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் விதமான கொள்கைகளையே இலங்கை எப்போதும் வகுத்து வந்துள்ளது. ஒவ்வொரு அரசும் இதே கொள்கையில் தான் பயணிக்கின்றன.

1980களில் ஜெயவர்த்தன அரசின் காலத்தில், உலக பனிப்போர் காலத்தில் இந்தியா ரஷ்யாவுடன் நெருக்கமாக உறவை பின்பற்றிய சூழ்நிலையில், இலங்கை அமெரிக்காவுடன் இணைந்து இந்தியாவை வெறுப்பேற்றியது.. இதன் விளைவாக இந்தியா தலையிட்டு இலங்கையை அமெரிக்காவுடன் நெருக்கமாக செயற்பட வேண்டாம் என வலியுறுத்தும் நிலைமை ஏற்பட்டது. பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர் நிலைமைகள் மாறின.

தற்போது உலகை வல்லரசான சீனா ஆக்கிரமித்து வருகின்ற நிலையில், இலங்கை மீண்டும் சிங்கள பௌத்த கொள்கையை கையில் எடுத்துக்கொண்டு தமது அதிகாரத்தை கையில் வைத்துக்கொள்ள சீனாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் சீனாவின் நலனுக்காக அவர்கள் நாட்டுக்குள் ஊடுருவவும் இடமளித்துள்ளனர். சீனாவும் இதனை உறுதிப்படுத்திக்கொண்டு இலங்கையில் அவர்களின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இது பூகோள அரசியலில் பாரிய நெருக்கடியை இலங்கைக்கு ஏற்படுத்தியுள்ளது.

வல்லரசுகளான இந்தியா, சீனா, அமெரிக்காவை நாட்டுக்குள் இடமளித்து இலங்கை நெருக்கடிக்குள் விழுந்துள்ளது. ஆனால் இந்த பூகோள அரசியலை இலங்கை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முடியும். அதற்கு முதலில் உள்நாட்டு கொள்கையில் மாற்றங்களை செய்தாக வேண்டும். அதன் மூலமாக நமது நலனுக்காக வல்லரசுகளை பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் நாம் அவ்வாறான வெளிப்படை கண்ணோட்டத்தில் பார்க்க முயற்சிப்பதில்லை., சிங்கள பௌத்த பேரினவாதத்தையே ஆட்சியாளர்கள் கையில் தக்கவைத்துக்கொண்டுள்ளனர். இவர்கள் சிங்கள பௌத்த வாக்குகளில் ஆட்சிக்கு வந்ததாக கொண்டாடி வருகின்றனர். இது வெட்கப்பட வேண்டிய செயற்பாடு.

ஒரே நாடு, ஒரே சட்டம் எனக் கூறி நல்லிணக்க வேலைத்திட்டத்திற்கு அடிப்படைவாதியான ஞானசார தேரரை நியமித்துள்ளீர்கள், பல செயலணிகளில் இராணுவத்தை உள்நுழைத்துள்ளீர்கள். இந்த கொள்கை, ஒருபோதும் நலன்களுக்கு கைகொடுக்காது.

அரசியல் நிலைப்பாட்டில் எதுவாக இருந்தாலும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குறித்து தனிப்பட்ட மரியாதையை நாம் கொண்டுள்ளோம். சட்ட வல்லுனராக மிகப்பெரிய மதிப்பை அவர்மீது கொண்டுள்ளேன். ஆனால் இப்போது அவர் வெளிவிவகார அமைச்சராக இத்தாலியில் கூறிய சில விடயங்களை அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அதே மாநாட்டில் அவ்வாறான கருத்தை முன்வைத்தார். அவரது கொள்கை அதுவாகவே இருக்கும் என்பதில் ஆச்சரியப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பீரிஸும் இந்த நாட்டில் பல்லின சமூகம், மத கலாசார அடையாளங்களை வெளிப்பாடு வேண்டிய அவசியம் இல்லையென கூறியது மிகப்பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியது. இது பீரிஸின் நிலைப்பாடாக இருக்க கூடாது. சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியில் இருக்கின்றோம் என அவரும் கூறுவது மதிப்புக்குரிய விடயம் அல்ல.

இன்று நாம் பல்வேறு பிரச்சினைகளில் சறுக்கி வருகின்றோம்.. இவ்வாறான நிலையில் உங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாத வரையில், பூகோள அரசியலில் வெற்றி கொள்ள முடியாது. குறிப்பாக இந்த வலயத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியம். அவர்களும் இங்கு வேறு வல்லரசுகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே நாடாக தாம் இருக்க வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகின்றது. இந்தியாவை சமாளிக்கலாம் என நீங்கள் நினைத்தால் அதற்கு ஏனைய வல்லரசுகளுக்கு சில பகுதிகளையும் இந்தியாவிற்கு சில பகுதிகளையும் வழங்கலாம் என நீங்கள் கருதினால் அது ஒருபோதும் வெற்றிபெறாது.

இதற்கு எமக்கு இருக்கும் ஒரே வழிமுறை, இலங்கையை பன்மைவாத நாடாக்குவதுடன் ,தேசிய கொள்கையை மாற்றிக்கொள்வதும், புதிய அரசியல் அமைப்பின் மூலமாக அதனை உறுதிப்படுத்துவதும் மட்டுமேயாகும். பிரிவுகளுக்கு இடமளிக்காது பூகோள அரசியலை கையாளுவதுமே சகலருக்கும் சாதகமாக அமையும் என்றார்.

# முறைப்பாடுகள் என்னிடம் வரும் வரை காத்திருக்க வேண்டாம்

## -அதிகாரிகளுக்கு அரச அதிபர் வேண்டுகோள்-



யாழ். மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்பட்டும் வீதிகள் தொடர்பில் எனக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருவதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொவிட், டெங்கு மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மக்கள் தமது பிரச்சினை தொடர்பில் முன்வைக்கும் போது அதற்கு முடிந்தவரை தீர்வை பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும். அவர்கள் தீர்வு கேட்டு என்னிடம் முறைப்பாடுகளை செய்கிறார்கள் அவ்வாறில்லாமல் சம்பந்தப்பட்ட துறையினர் மக்கள் பிரச்சினைகளைக் கூறும் போது பிரச்சினைகள் ஏற்படுகின்ற இடத்தில் அவர்களுக்கு தீர்வு வழங்க வேண்டும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்பாக பல முறைப்பாடுகள் மக்கள் முன் வைத்துள்ளார்கள். வீதி திருத்த பணிகளின்போது இரண்டு பக்கங்களையும் ஒரே தடவையில் புனரமைப்புச் செய்வதற்காக வேலைகள் இடம்பெறுவதால் மக்களின் போக்குவரத்தில் சிக்கல்கள் ஏற்படுகிறது.

ஆதலால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதிகளைப் புனரமைக்கும் போது ஒரு பக்கத்தை மக்கள் பாவனைக்காக விட்டு மறுபக்கத்தில் புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுவது நல்லது.

வீதி திருத்த வேலைகளில் ஈடுபடும்போது பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி வீதிப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவது பிரச்சினைகள் ஏற்படாவண்ணம் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு உதவும்.

ஆகையால் விரைவில் அனர்த்த முகாமைத்துவ பிரிவு வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச சபை, பிரதேச செயலகம் என்பவற்றை இணைத்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (75)

# காரைநகரில் இ.போ.ச. பேருந்து விபத்து




காரைநகர் வீதி புனரமைப்பு வேலைகள் முடிவுறாததன் காரணமாக வீதியை விட்டு பேருந்து நேற்று விலகி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வீதிப் புனரமைப்பு வேலையின் போது வீதியின் இருமருங்கிலும் ஆழமான குழிகள் தோண்டப்பட்டதாலும் சாரதியின் கவனக்குறைவு காரணமாகவும் குறித்த விபத்து இடம்பெற்றதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் காரைநகர் சாலை முகாமையாளர் தெரிவிக்கையில், குறித்த பாதையினூடாக இ.போ.ச பேருந்து யாழ்ப்பாணம் நோக்கி சேவையில் ஈடுபட்டது.

முன்னால் சென்ற தனியார் பேருந்து வீதியில் காணப்பட்ட குழி காரணமாக சடுதியாக பிறேக் பிடித்ததன் காரணமாக பின்னால் சென்று கொண்டிருந்த போக்குவரத்து சபை பஸ் வண்டி திடீரென பிரேக் பிடித்ததால் அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. (75)

# மாணவர்களுக்கு ஆபத்தாக மாறியுள்ள பாலம் அமைப்பதற்கு வெட்டிய குழி



கிளிநொச்சி சிவபாத கலையக பாடசாலைக்கு முன்பாக பாலம் அமைப்பதற்கு வெட்டிய குழி மாணவர்களுக்கு ஆபத்தாக மாறியுள்ளது என பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் கரைச்சி பிரதேச சபையினரால் பாலம் ஒன்று அமைப்பதற்கு பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியில் சுமார் நான்கு அல்லது ஐந்து அடி ஆழத்தில் குழி வெட்டப்பட்டுள்ள நிலையில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக குறித்த குழி நிரம்பி நீர் செல்வதனால் ஆழமற்ற குழி என கருதிய மாணவர்கள் அதனை கடந்து செல்ல முற்பட்ட போது தவறி வீழ்ந்துள்ளதாகவும் அதிஷ்டவசமாக ஏனைய உயர்வகுப்பு மாணவர்களால் அவர்கள் காப்பாற்றப் பட்டதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆபத்தான பகுதி என எந்தவிதமான எச்சரிக்கை சமிக்ஞையும் இல்லாத நிலையில் குறித்த பகுதி காணப்படுகிறது. இது தொடர்பில் கிராம அலுவலர் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் அறிவித்துள்ளதாகவும் பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். எனவே ஒரு விபரீதம் ஏற்பட முன்னர் பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (52)

# 33 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

கிளிநொச்சி -தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு நகர் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனை நடைபெறுவதாக தருமபுரம் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று சுற்றிவளைப்பு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டவிரோத கசிப்பு விற்பனையிலீடுபட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை உழவனூர் பகுதியிலும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இவர்களிடமிருந்து 33 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (55)

# புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றம்

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 20மேலதிக வாக்குகளால் நிறைவேறப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் தவக்குமார் தலைமையில் நடைபெற்ற குறித்த வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் பரமதாஸ் எதிர்த்து வாக்களித்தார். ஏனைய 20 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். (27))


# கேள்வி அறிவித்தல்-நல்லூர் பிரதேச சபை

## சபைநிதி வேலைத்திட்டம் 2021 (கட்டம் IV)

1.தலைவர்,பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்.

2.தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் **CIDA** தர முன்னுரிமைகள் பொருந்தும்.

3.கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் **(CIDA)** பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

4.தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **( Schedule)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **"தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்"** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700** ) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

6.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் 2021.11.26 ம் திகதியிலிருந்து 2021.12.16 ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2021.12.17 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8.கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9.கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2021.12.08** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு. ப. **10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம், | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| வீதி வேலைகள் | | | | | | | | |
| 1. | NPS/2021/CF/ IV/WD-01/01 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 01 கோண்டாவில் | 0.68 | 60 நாட்கள் | C9 & C8 | 49 நாட்கள் | 10,000.00 | 2022.03.03 |
| 2. | NPS/2021/CF/ IV/WD-02/02 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 02 கோண்டாவில் | 2.50 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 37,500.00 | 2022.03.17 |
| 3. | NPS/2021/CF/ IV/WD-03/03 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 03 கோண்டாவில் | 2.25 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 34,000.00 | 2022.03.17 |
| 4. | NPS/2021/CF/ IV/WD-04/04 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 04 கொக்குவில் | 0.51 | 60 நாட்கள் | C9 & C8 | 49 நாட்கள் | 7,500.00 | 2022.03.03 |
| 5. | NPS/2021/CF/ IV/WD-05/05 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 05 கொக்குவில் | 2.29 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 35,000.00 | 2022.03.17 |
| 6. | NPS/2021/CF/ IV/WD-06/06 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 06 கொக்குவில் | 1.57 | 90 நாட்கள் | C9 & C8 | 49 நாட்கள் | 23,500.00 | 2022.03.03 |
| 7. | NPS/2021/CF/ IV/WD-08/07 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 08 திருநெல்வேலி | 0.89 | 60 நாட்கள் | C9 & C8 | 49 நாட்கள் | 13,500.00 | 2022.03.03 |
| 8. | NPS/2021/CF/ IV/WD-09/08 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 09 கல்வியங்காடு | 0.81 | 60 நாட்கள் | C9 & C8 | 49 நாட்கள் | 12,500.00 | 2022.03.03 |
| 9. | NPS/2021/CF/ IV/WD-10/09 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 10 அரியாலை | 3.76 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 56,000.00 | 2022.03.17 |
| 10. | NPS/2021/CF/ IV/WD-11/10 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 11 அரியாலை | 1.70 | 90 நாட்கள் | C9 & C8 | 49 நாட்கள் | 26,000.00 | 2022.03.03 |
| 11. | NPS/2021/CF/ IV/WD-12/11 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு-வட்டாரம் 12 அரியாலை | 0.94 | 60 நாட்கள் | C9 & C8 | 49 நாட்கள் | 14,000.00 | 2022.03.03 |
| 12. | NPS/2021/CF/ IV/Conc-Rd/12 | கொங்கிறீற் வீதிகளாக புனரமைத்தல் | 2.06 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 31,000.00 | 2022.03.17 |
| நடைபாதைகளை விருத்திசெய்தல் | | | | | | | | |
| 13. | NPS/2021/CF/ IV/Pav-01/13 | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாட-சாலையினை அண்மித்த நடைபாதைகளை விருத்திசெய்தல் | 2.01 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 30,000.00 | 2022.03.17 |
| 14. | NPS/2021/CF/ IV/Pav-02/14 | திருநெல்வேலி பொதுச்சந்தையின் முன்பகுதி (ஆடியபாதம் வீதி) நடை-பாதைகளை விருத்திசெய்தல் | 2.14 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 32,000.00 | 2022.03.17 |
| 15. | NPS/2021/CF/ IV/Pav-03/15 | திருநெல்வேலி சந்தியின் YMHA பகுதி மற்றும் மருத்துவபீடப்பகுதி (ஆடியபாதம் வீதி) நடைபாதைகளை விருத்திசெய்தல் | 2.27 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 34,000.00 | 2022.03.17 |
| மயான அபிவிருத்தி வேலைகள் | | | | | | | | |
| 16. | NPS/2021/CF/ IV/Ceme-01/16 | திருநெல்வேலி சித்துப்பாத்தி மற்றும் காரைக்கால் இந்து மயானங்களை விருத்தி செய்தல் | 2.04 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள் | 31,000.00 | 2022.03.17 |
| 17. | NPS/2021/CF/ IV/ Ceme-02/17 | கொட்டைக்காடு, கொக்குவில் மற்றும் கட்டையாலடி இந்து மயானங்களை விருத்தி செய்தல் | 2.92 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள | 43,000.00 | 2022.03.17 |

2021.11.26

தலைவர்,
பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை,கொக்குவில்.

# மாவீரர் நாள் தடை உத்தரவுகளை நீக்கக்கோரி முல்லை நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கு தாக்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு கடந்த 17, 23 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட அறுபத்தொன்பது பேருக்கு தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மாவட்டத்தின் முள்ளியவளை ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி, ஐயன்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய ஏழு பொலிஸ் நிலையங்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததற்கு அமைவாக குறித்த அறுபத்தொன்பது பேருக்கான தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கான தடை உத்தரவை நீக்கக்கோரி நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

தடைக்கட்டளை விதிக்கப்பட்டவர்கள் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் வழக்கில் முன்னிலையாகியதுடன்,



தடைக்கட்டளை பெற்றவர்கள் சார்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், சமூக செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினார்கள். (56)


## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021



இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்

அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)

## பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்கள் பாதுகாப்பை உணர வைப்பது ஒவ்வொருவரினதும் கடமை. அனைவரும் இணைந்து பாதுகாப்பான சமத்துவமான சமூகத்தை உருவாக்குவோம்."

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம்


# யானை தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு ,மன்னாங்கண்டல் கிராமத்தில் யானை தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் மன்னாவெளி குளப்பகுதியில் மீன்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பாததன் காரணமாக ஊர்மக்கள் தேடிச் சென்ற போது குளப்பகுதியில் யானைகளால் தாக்கப்பட்ட நிலையில் சடலமாக காணப்பட்டார்.

அழகன்கோபால்ராஜ் (வயது 65) என்ற முதியவரே உயிரிழந்தவர். சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (27)

# குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயத்தில் பெருங்கதை விரத உற்சவம்

குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருங்கதை விரத உற்சவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகித் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

இவ்வாலயப் பெருங்கதை விரத உற்சவ நாட்களில் தினமும் முற்பகல்-10 மணியளவில் அபிஷேகம் பூசைகளுடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருவதுடன் தொடர்ந்து பெருங்கதைப் படிப்பும் நடைபெறும் என மேற்படி ஆலய நிர்வாக சபையின் தலைவர் கந்தையா சிவகுமார் தெரிவித்துள்ளார். (18)

# குளங்களின் நீர் மட்டம் அதிகரிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 30 அடியை அண்மித்துள்ளதுடன் ஏனைய குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

வடமாகாணத்தின் அதிக நீர் விநியோக பரப்புகளையும் விவசாய நிலங்களையும் கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 9 பாரிய மற்றும் நடுத்தர குளங்களின் நீர்மட்டம் தற்போது அதிகரித்துள்ளன.

அண்மைய நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக மேற்படி குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் ஐந்து குளங்கள் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய ஆரம்பித்துள்ளதுடன் ஏனைய நான்கு குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

நேற்றுக்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள நிலவர அறிக்கையின்படி கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 36 அடி நீர் கொள்ளளவு கொண்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 29 அடி 8 அங்குலமாக உயர்வடைந்துள்ளது

26 அடி கொள்ளளவு கொண்ட கல்மடு குளத்தின் நீர்மட்டம் 25 அடி 10 அங்குல மாகவும் காணப்படுவதுடன் பிரமந்தனாறுக் குளம் மற்றும் கனகாம்பிகை குளம் என்பன கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நீர்மட்டம் உயர்வடைந்து வான் பாய்ந்து வருகின்றன.

இதேபோன்று கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அக்கராயன் குளத்தில் நீர் மட்டம் 22 அடி 5 அங்குல மாகவும் கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர்மட்டம் 07அடி 2 அங்குல மாகவும் உயர்வடைந்துள்ளது.

அத்துடன் புதுமுறிப்புக்குளம் குடமுருட்டிக்குளம் வன்னேரிக்குளம் என்பவற்றின் நீர்மட்டம் உயர்வடைந்து வான் பாய்கின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் கரியாலை நாகபடுவான் பகுதியில் 43.5 மில்லி மீட்டர் மழையும் அக்கராயன் பிரதேசத்தில் 38. 5 மில்லி மீட்டர் மழையும் இரணைமடு பகுதியில் 53.2 மில்லி மீட்டர் மழையும் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (55)

# விபத்தில் இளம் பெண் படுகாயம்



கரணவாய் தெற்கு- மண்டான் வீதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இளம்பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த எஸ்.சிவகலா (வயது -30) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(44)

# கொடிகாமத்தில் கடைக் கட்டிடத்துடன் மோதி டிப்பர் விபத்து



கொடிகாமம் நகர்ப் பகுதியில் நேற்றுக் காலை டிப்பர் வாகனம் ஒன்று சந்தைக் கட்டிடத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள வீதிச் சமிக்கை விளக்கு பகுதியில் முன்னே சென்ற வாகனம் சடுதியாக பிறேக் பிடிக்க பின்னால் வந்த டிப்பர் கட்டுப்பாட்டினை இழந்து கடைத் தொகுதியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இருப்பினும் இவ் விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.-(13) ,(75)

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

பருத்தித்துறை, முதலாம் கட்டை சந்திப் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை 2மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தும்பளை மேற்கு பருத்தித்துறை சேர்ந்த சண்முகராஜா துஷ்யந்தன் (வயது- 21) என்பவராவார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன்

உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டார். (44)

# சத்தியசாயி பாபாவின் 96 ஆவது அவதார தின விழா



திருநெல்வேலியில் உள்ள யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 96 ஆவது அவதார தின விழா கடந்த செவ்வாய்க்கிழமை நிலைய மண்டபத்தில் அதிகாலை, காலை, மாலை நிகழ்வுகளாக இடம்பெற்றது.

அதிகாலை-04.45 மணியளவில் ஓம்காரம்,சுப்ரபாதம் ,நகர சங்கீர்த்தனம் என்பன அதிகாலை நிகழ்வுகளாக நடைபெற்றன. நகர சங்கீர்த்தனம் மேற்படி நிலையத்தின் முன்பாக ஆரம்பமாகி இராமநாதன் வீதி, குமாரசாமி வீதி, ஆத்திசூடி வீதி வழியாக மீண்டும் நிலையத்தை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து காலை நிகழ்வுகள் யாழ்ப்பாணம் சத்தியசாயி நிலையத்தின் உபதலைவர் டாக்டர் ஜெ. தனேஸ்குமாரின் பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து காலை-8-30 மணியளவில் பிரசாந்திக் கொடியேற்றம், வேதபாராயணம், அஷ்டோத்திரம், காயத்ரீ ஜெபம், சாயி காயத்ரீ நாம ஜெபம் ஓதுதல், திருநீற்றுப் பதிகம், பஜனை, தெய்வீக இசை அர்ப்பணம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து கிளிநொச்சி சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சிவேந்திர சைதன்ய சுவாமிகளின் பக்தியும் பக்தனும் எனும் தலைப்பிலான சிறப்புரையும், நாம சங்கீர்த்தனம், மங்களாராத்தி ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவுப் பொதி வழங்கிவைக்கப்பட்டது.

மேற்படி விழாவில் யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தின் தலைவர் வே.கருணாகரன், சாயி மார்க்கத்தின் பிரதம ஆசிரியர் வைத்தியகலாநிதி ஆர்.கணேசமூர்த்தி, யாழ்.புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபன் மற்றும் சாயி அன்பர்கள் என நூற்றுக்கணக்கானோர் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டனர். மாலை நிகழ்வுகள் பிற்பகல்-02.15 மணியளவில் ஆரம்பமாகிப் பிற்பகல்-06.15 மணியளவில் மங்களாராத்தியுடன் நிறைவுபெற்றது. (18)

# கொரோனாவால் மேலும் ஒருவர் மரணம்

உயிரிழந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட வயோதிபருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குச்சம் ஒழுங்கை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செங்கல் வரதராசா சக்திவேல் (வயது-76) என்பவர் நேற்றுமுன்தினம் வீட்டில் வழுக்கி விழுந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வைத்திய சலையில் மேற்கொள்ளப்பட்ட டீ.சீ.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (44)

# தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சிறுதானியங்கள் வழங்கி வைப்பு




கிளிநொச்சி -கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பயறு, உழுந்து வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் அங்குரார்ப்பண நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் திட்டமிடல் பணிப்பாளர் கணக்காளர் உத்தியோகத்தர்கள் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

# நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த தடையுத்தரவிற்கு எதிராக மேல்முறையீட்டு நகர்தல் பத்திரம் தாக்கல்

மாவீரர் தின நிகழ்வுகளுக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த தடையுத்தரவிற்கு எதிராக எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் மேல்முறையீட்டு நகர்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று குறித்த மேல்முறையீட்டு நகர்தல் பத்திரம் மீதான விசாரணை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக கிளிநொச்சி காவல்துறையினரால் 51 பேருக்கான தடையுத்தரவு பெறப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், விசுவமடு, முழங்காவில் ஆகிய பகுதிகளில் மாவீரர் துயிலுமில்லங்கள் காணப்படுவதுடன்,உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்திற்கும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பொலிடரினால் தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது.

குறித்த துயிலுமில்லங்களில் கடந்த 2017 மற்றும் 18ம் ஆண்டுகளில் மாவீர்நாள் நினைவேந்தல்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# குறிஞ்சாக்கேணி ஆற்றை கடப்பதற்கு கடற்படையினரால் இலவச படகு சேவை



திருகோணமலை - கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தின் ஆற்றினை கடப்பதற்கு இலங்கை கடற்படையினரினால் இலவச படகு சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோகபூர்வமாக நேற்று கடற்படையின் படகு சேவை ஆரம்பமாகவுள்ளது.

குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப்பணி நடைபெற்று வரும் நிலையில் அவ் ஆற்றினை கடந்து செல்வதற்காகக் கிண்ணியா நகரசபையினால் தனியார் ஒருவருக்கு இழுவை படகு மூலம் கட்டணம் செலுத்தி படகு சேவை நடைபெற்றிருந்தது.

இந்நிலையில் அவ் இழுவை படகு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மாணவர்கள் உட்படப் பலருடன் பயணித்த நிலையில் விபத்திக்குள்ளாகி பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதனால் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் பணிப்புரைக்கமைய விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை கடற்படையின் படகு சேவை நேற்றுமுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட படகில் ஆகக்கூடிய தொகையாக 25 பேர் வரை பயணிக்க முடியும் எனவும் பயணிகள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் தனித்தனியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படகு சேவை திருகோணமலை கடற்படையினரினால் மேற்பார்வையிட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு சிலிண்டர் நேற்றும் வெடித்தது

## -வீடொன்று பலத்த சேதம்-

க.பிரசன்னா

பன்னிப்பிட்டிய - கொட்டாவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாகவும் எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தினால் வீடு பலத்த சேதமடைந்துள்ளதாகவும் எனினும் வீட்டிலுள்ள எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் நாட்டில் இதுவரை நான்கு எரிவாயு சிலிண்டர் விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 4ஆம் திகதி வெலிகம, கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் வாயு கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் காயமடைந்திருந்தனர்.

கடந்த 16ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்து வாயு கசிவு காரணமாக ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த 20ஆம் திகதி கொழும்பு 7 குதிரை பந்தயத் திடல் அருகில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் காயமடைந்திருந்தனர்.

# மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு தென்கிழக்காக தற்போது நிலை கொண்டுள்ள கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழைபெய்துவருகின்றது.

இதன்காரணமாக மட்டக்களப்பு மாநகரசபைக் குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்று தொடக்கம் பெய்துவரும் கடும் மழை காரணமாக மட்டக்களப்பின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் போக்குவரத்து செய்வதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர். அத்துடன் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையேற்பட்டுள்ளதுடன் வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளதை காணமுடிகின்றது.

# புதிய உரு மாறிய கொரோனா வைரஸ்

ஆபிரிக்க நாடான பொட்ஸ்வானாவில் புதிய உருமாறிய கொ ரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சியாளர்களைக் கவலை கொள்ளச் செய்துள்ளது. டீ.1.1529 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த உருமாறிய கொரோனா வைரஸ் தனது ஸ்பைக் புரதத்தில் 32 மாற்றங்களைக் கொண்டுள்ளது. இதுகுறித்து சர்வதேச ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

கொ ரோனா வைரசில் இந்தளவுக்கு புரோத ஸ்பைக்கில் மாற்றங்கள் ஏற்படுவது இதுவே முதல்முறை என்பதால் இது ஆய்வாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. வைரசுக்கு வெளியே இருக்கும் புரோத ஸ்பைக் மூலமே அவை மனிதகலங்களை பற்றிக்கொள்கிறது.

இதில் ஏற்படும் சில மாற்றங்கள் வைரஸ் பரவலை அதிகரிக்கலாம். கடந்த நவ.ம்பர் 11ஆம் திகதி இந்த உருமாறிய கொரோனா கண்டறியப்பட்ட நிலையில், அதன் பின்னர் தென் ஆபிரிக்க நாடுகளுக்கு இந்த உருமாறிய கொரோனா பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த சமரசிங்ஹ இராஜினாமா

அரச தரப்பு எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான மஹிந்த சமரசிங்ஹ பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருப்பதை பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்தார்.

2021, நவம்பர் 25ஆம் திகதி முதல் அதாவது நேற்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருப்பதாக இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64(1)ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு இது பற்றி அறிவித்துள்ளார்.

# குளத்தில் மூழ்கி உயிரிழந்த நான்கு வயதுச் சிறுவனுக்கு கொரோனா தொற்று உறுதி

தாயாருடன் குளத்தில் குளிப்பதற்குச் சென்றிருந்த நிலையில், நீரில் மூழ்கி உயிரிழந்த 4 வயதான சிறுவனுக்கு கொரோனா தொற்று, உறுதி செய்யப் பட்டிருக்கின்றது.

குறித்த சம்பவம் வவுனியா - பாவற்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் வசித்துவரும் தாயொருவர், தனது பிள்ளைகளுடன் பாவற்குளம் குளத்திற்கு நீராடச் சென்றுள்ளார். இதன்போது 4 வயதுச் சிறுவனை குளத்தில் நீராட விட்டு, தாய் கரைக்குத் திரும்பிய போது, குளத்திற்குள் சென்று நீராடிக் கொண்டிருந்த சிறுவன் காணாமற்போயிருந்தான்.

இதனையடுத்து, தாயார் அங்கு நின்றவர்கள் மற்றும் ஊரவர்களை அழைத்து, சிறுவனைத் தேடிய போது, சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டார்.

உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், சிறுவன் மரணமடைந்துள்ளார். வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியைச் சேர்ந்த அம்ஜத் என்ற 4 வயதுச் சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, வவுனியா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசீஆர் பரிசோதனையில், மரணமடைந்த சிறுவனுக்கு, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சடலம் அடக்கம் செய்யப்படவுள்ளது.


## வாடகை ஒப்பந்த கேள்வி அறிவித்தல் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்குகின்ற சிற்றுண்டிச்சாலையினை 01.01.2022-31.12.2022 வரையான காலப்பகுதிக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

படிவக் கட்டணம் - ரூபா 500.00
கேள்வி வைப்பு - ரூபா 10,000.00
படிவ விநியோகம் - 25.11.2021 - 15.12.2021 ம் திகதி வரை
(அலுவலக நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை)
விண்ணப்பம் ஏற்பு - 16.12.2021ம் திகதி 15.00 மணி வரை

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல 021 222 2647)

வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

### வெளிவாரிப் பரீட்சைகள்

1.இசைமாணி / நடனமாணி - நான்காம் வருடத் தேர்வு - 2017 (இறுதிச் சந்தர்ப்பம்)

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளமுகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 10.12.2021 (வெள்ளிக்கிழமை).

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

பிரதிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

24.11.2021 பதிவாளர்

## மாங்கல்யா

### லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
266, பலாலி வீதி, கந்தர்மடம்.
தொடர்புகளுக்கு: 0771971667/0773164796

### மணமகன் விபரம்

பிறந்த திகதி :12.04.1981 மதம்: இந்து (P)
நட்சத்திரம் : பூசம் கி.பா. :61 செவ்/சூரி 7 ல்
தகைமை: B.A
தொழில்: D.O அரசசேவை
எதிர்பார்ப்பு: அரசசேவை/தனியார் மணமகள்

பிறந்த திகதி : 07.09.1992 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம் (2) கி.பா.: 12 செவ் 3 ல்
தகைமை:G.C.E A/L தொழில் :UK PR
எதிர்பார்ப்பு: A/L படித்த மணமகள் (காரைநகர் மட்டும்)

பிறந்த திகதி:16.06.1989 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் (3) கி.பா.: 26 செவ் 9 ல்
தகைமை: Cima தொழில்: Australiya PR
எதிர்பார்ப்பு:பட்டதாரி அவுஸ்திரேலியா /இலங்கை மணமகள்

பிறந்த திகதி: 17.05.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம் கி.பா. : 27 செவ் 12 ல்
தகைமை: Cima Final
தொழில்:UK PR
எதிர்பார்ப்பு: UK/இலங்கை மணமகள்

பிறந்த திகதி: 16.04.1985 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: சதயம் கி.பா.: 9 செவ் 12 ல்
தகைமை:B.Sc தொழில்:USA PR
எதிர்பார்ப்பு: USA+இலங்கை மணமகள்

பிறந்த திகதி:13.02.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் (4) கி.பா.: 73 செவ் 1 ல்
தகைமை: B.Sc தொழில்:ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசசேவை மணமகள்

பிறந்த திகதி: 24.05.1981 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம்(3) கி.பா.: 25 செவ் 2 ல்
தகைமை: B.Sc தொழில்: UK PR
எதிர்பார்ப்பு பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி:04.06.1987 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: பூரம் கி.பா.: 50 செவ் 8 ல்
தகைமை: B.Com தொழில்:அரசசேவை
எதிர்பார்ப்பு:அரசசேவை மணமகள்

### மணமகள் விபரம்

பிறந்த திகதி:06.12.1995 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: ரோகிணி கி.பா.:43 செவ் 9 ல்
தகைமை: Business Management
தொழில்: Company
எதிர்பார்ப்பு: அரசசேவை/வெளிநாடு மணமகன்

பிறந்த திகதி:23.11.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: ரோகிணி (4) கி.பா.: 21 செவ்/சூரி 10 ல்
தகைமை: I.T Software Eng. தொழில்:Company
எதிர்பார்ப்பு: அரசசேவை /வெளிநாடு மணமகன்

பிறந்த திகதி: 30.07.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம்:பூரட்டாதி (1) கி.பா.: 35 செவ் 12 ல்
தகைமை: Business Management
தொழில்: Company
எதிர்பார்ப்பு : UK/ Australiya/Canada மணமகன்

பிறந்த திகதி: 19.10.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம் : சதயம் கி.பா. :11 செவ் /சூரி11 ல்
தகைமை: I.T Eng. தொழில்: UK Student Visa
எதிர்பார்ப்பு : UK PR பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி:29.10.1993 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி (1) கி.பா. : 58 செவ்/சூரி 7 ல்
தகைமை:B.Sc தொழில்:Company
எதிர்பார்ப்பு: UK/Canada/Singapore/Newzealand மணமகன்

பிறந்த திகதி : 24.09.1989 மதம் : இந்து (V)
நட்சத்திரம் புனர்பூசம் (3) கி.பா. : 15 செவ்/சூரி 12 ல்
தகைமை: Chartted தொழில்:Accountant
எதிர்பார்ப்பு : Australiya PR பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 12.02.1996 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் (4) கி.பா.: 26 செவ் 9 ல்
தகைமை: B.Sc Civil Eng.
தொழில்: Australiya PR
எதிர்பார்ப்பு: Eng/Accountant மணமகன்

பிறந்த திகதி: 28.09.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: கார்த்திகை (2) கி.பா.:18 செவ்/சூரி 10 ல்
தகைமை: B.Com தொழில்: Company
எதிர்பார்ப்பு: Australiya/Canada மணமகன்

## மணமக்கள் தேவை

இந்து,கிறிஸ்தவர்கள்,அனைத்து இனத்தவர்களில் உள்நாடு,வெளிநாடு டாக்டர்,எஞ்சினியர், எக்கவுண்டன், சட்டத்தரணி, அரச நிர்வாகத்துறை வங்கி, விரிவுரையாளர், ஆசிரியர், அரச/தனியார் துறை சுயதொழில் வர்த்தகர்கள், விவாகரத்து, செவ்வாய் தோஷம், சூரியன் செவ்வாய் சேர்க்கை சுத்த ஜாதகம் முதற்கொண்டு மணமக்களின் ஜாதகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. தகுந்த வரன்களின் விபரங்களுக்கு ஜாதகம், குடும்ப விபரம், புகைப்படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

### சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
82/3 மில் ஒழுங்கை, மல்லாகம், யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு-0779694009/0766528901

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்.தினக்குரல் பதிப்பிலும் மற்றும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு தினக்குரல் பதிப்பிலும் வெளிவரும் இம்மாங்கல்யாப்பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொ.இலக்கம்: 0779687613/0217388307

## பொது அறிவித்தல் மாநகரசபை யாழ்ப்பாணம் பாதீடு - 2022

யாழ் மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2021.11.26 தொடக்கம் 2021.12.10 ஆம் திகதி வரை

- ☐ யாழ் மாவட்டச் செயலகம்
- ☐ யாழ் பிரதேச செயலகம்
- ☐ நல்லூர் பிரதேச செயலகம்
- ☐ யாழ் மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி
- ☐ யாழ் பொது நூல்நிலையம்
- ☐ நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ் வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2021.12.10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

26.11.2021

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## -முதலாவது டெஸ்ட் போட்டி-

# 187 ஓட்டங்களால் இலங்கை மே.இ.தீவுகளை வீழ்த்தியது



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை 187 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதன் முதல் போட்டி கடந்த 21 ஆம் திகதி காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் இன்னிங்ஸுக்காக 133.5 ஓவர்களை எதிர்கொண்டு 386 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் 85.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

இதனால் 156 ஓட்ட முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை 40.5 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களை மாத்திரம் பெற்று டிக்ளே செய்தது.

இந்த முடிவுகளின் அடிப்படையில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வெற்றிக்கு 348 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

வெற்றியிலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை நேற்று ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள், நான்காம் நாள் ஆட்டம் நிறைவில் 25.3 ஓவர்களில் 52 ஓட்டங்களை பெற்று 6 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

போட்டியின் ஐந்தாம் நாளான நேற்று ஆரம்பிக்க மேற்கிந்தியத்தீவுகளின் வெற்றிக்கு நான்கு விக்கெட்டுகள் மீதமுள்ள நிலையில் 296 ஓட்டங்கள் தேவை என்ற நிலை உள்ளது.

ஆடுகளத்தில் பொன்னர் 18 ஓட்டங்களுடனும், ஜோசுவா டா சில்வா 15 ஓட்டங்களுடனும் ஐந்தாம் நாள் ஆட்டத்துக்காக தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடினர்.

மதிய நேர உணவு இடைவேளையின் போது மேற்கிந்தியத்தீவுகள் மேலதிகமாக ஒரு விக்கெட்டினை பறிகொடுத்து 125 ஓட்டங்களை பெற்றிருந்தது.

மதிய நேர உணவு இடைவேளையின் பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணி 79 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 187 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் அதிகபடியாக ஜோசுவா டா சில்வா 54 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க, பொன்னர் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களை குவித்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் ரமேஷ் மெண்டிஸ் 5 விக்கெட்டுகளையும், லசித் எம்புல்தெனிய 4 விக்கெட்டுகளையும், பிரவீன் ஜெயவிக்ரம ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை 1:0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலையில் உள்ளது.



## தேசிய மட்ட கயிறிழுத்தல் போட்டியில் யாழ்.மாவட்ட பெண்கள் அணிக்கு வெள்ளி



தேசிய மட்ட கயிறுத்தல் போட்டியில் யாழ் மாவட்ட இளைஞர் பெண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டனர்.

மாவட்ட அணிகள் கலந்து கொள்ளும் 33 வது தேசிய மட்ட போட்டியில் பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டிகள் கடந்த செவ்வாய்க் கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட இளைஞர் அணி மோதியது. இதில் யாழ் மாவட்ட இளைஞர் அணி தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

யாழ் மாவட்ட பெண்கள் இளைஞர் அணி 2017, 2018 ஆம் ஆண்டுகளில் வெண்கலப் பதக்கத்தையும், 2019 ஆம் ஆண்டு சம்பியன் பட்டத்தையும், இவ்வாண்டு வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (21)

## -கரவெட்டி நவசக்தி அணிக்கு எதிரான-

## கால்பந்து போட்டியில் வினித் கோல் மழை; நவிண்டில் கலைமதி அசத்தல் வெற்றி



வினித்தின் கோல்மழையால் நவிண்டில் கலைமதி அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் நடாத்தும் வடமராட்சி பிரதேச அணிகள் பங்கு பற்றும் இளையோர் வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட தொடர் இமையாணன் மத்தி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நடைபெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணி வீரர் வினித் ஹெற்றிக் கோல்களைப் போட்டு அசத்த முதல் பாதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் வினித்தின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நவசக்தி அணியினர் திணறினர். இரண்டாவது பாதியாட்டத்திலும் வினித் மேலும் இரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் நவிண்டில் கலைமதி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (21)




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாவற்குளத்தின் இரு வான்கதவுகள் திறப்பு; அயலிலுள்ள பொதுமக்களுக்கு அவசர வேண்டுகோள்

நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக பாவற்குளத்தின் இரண்டு வான்கதவுகள் ஒரு அடி திறக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் அயல் பகுதிகளில் வசிக்கும் மக்களை மிகுந்த அவதானமாக இருக்குமாறும், மத்திய நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் கு.இமாசலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, வவுனியா மாவட்டத்தில் அண்மைய தினங்களாக இரவு முதல் பெய்து வரும் கன மழையினால், பாவற்குளத்தின் நீர்மட்டம் 18 அடி 6 அங்குலமாக அதிகரித்துள்ளது.

இதனால் பாவற்குளத்தின் 2 வான் கதவுகள் ஒரு அடி அளவுக்கு திறக்கப்பட்டுள்ளது.



இதனால், பாவற்குளத்தின் கீழ் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, வேப்பங்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களை மிகவும் அவதானமாகவும் முன்னெச்சரிக்கையுடனும், இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் சவாலை எதிர்கொள்வதற்காக, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அனைவரும் தயார் நிலையில் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள முகத்தான்குளம் மற்றும் மருதமடுகுளம் ஆகியனவும் வான்பாய்ந்து கொண்டிருக்கின்றன. எனவே, இக்குளங்களின் அருகிலுள்ள பொதுமக்களும் அவதானமாக இருக்குமாறு, அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பாதையை விட்டு விலகிய முச்சக்கரவண்டி கோர விபத்து - ஒருவர் பலி, மூவர் காயம்

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

ஹட்டன் டிக்கோயா பகுதியிலிருந்து டிக்கோயா பெரிய மணிக்வத்தை பகுதிக்கு சென்றுகொண்டிருந்த, குறித்த முச்சக்கர வண்டி, நேற்று முன்தினம் இரவு பெரிய மணிக்வத்தை தோட்டத்திற்குச் செல்லும் வீதியில், வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

முச்சக்கரவண்டிச் சாரதிக்கு முச்சக்கரவண்டியைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே, இவ்விபத்து நேர்ந்துள்ளதாக, விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் டிக்கோயா பெரிய மணிக்வத்தை பகுதியைச் சேர்ந்த சுந்தராஜ் (வயது - 65) மூன்று பிள்ளைகளின் தந்தையென அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் டிக்கோயா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த மூவரும், டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண் சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டின் 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, கொழும்பு, கண்டி, களுத்துறை, மாத்தளை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவற்றில் கண்டி, மாத்தளை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு, இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




British Level 05
Leading towards Top up Degree

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

HIGHER DIPLOMA IN QUANTITY SURVEYING

HIGHER DIPLOMA IN CIVIL ENGINEERING

APPLY NOW FOR NEW INTAKE

ENTRY REQUIREMENTS

- G.C.E. A/L Maths/ Bio/ Technology Stream
- G.C.E. O/L or G.C.E. A/L in other streams + Engineering Foundation

DURATION : 02 Years

Higher Diploma offered by UGC recognized British University

077 074 6553 | 077 744 2691

INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
ICBT CAMPUS JAFFNA

580, Hospital Rd., Jaffna
Tel : (+94) 214 777 888
Fax : (+94) 654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

National Business Excellence 2019 | 2018 | 2017 | 2016
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk

# சமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாகியிருந்தால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது

## -நளின் பண்டார எம்.பி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிற்கு மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஸ கூறிய அறிவுரைக்கு பின்னரே, பசளைப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கலாமென எதிர்க்கட்சி கருதுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு ராஜபக்ஸக்கள் போட்டியிட்டிருந்தாலும், வெற்றி பெற்றிருப்பார்கள் என்ற அடிப்படையில், சமல் ராஜபக்ஸ போட்டியிட்டிருந்தால், அவரே ஜனாதிபதியாகியிருப்பர். அன்று அப்படி நிகழ்ந்திருந்தால், பசளைப் பிரச்சினை இன்று ஏற்பட்டிருக்காதெனவும், நளின் பண்டார குறிப்பிட்டார்.

புத்தளத்தில் குளங்களை அமைப்பதற்கு அரசாங்கம் 15 லட்சம் வழங்கவேண்டுமென, ராஜாங்க அமைச்சர்கள் கூறியுள்ளதாக வெளியான தகவல் குறித்து, விசாரணை நடத்துமாறு, நளின் பண்டார, சமல் ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு பதிலளித்த ராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ, இவ்வாறான கருத்துக்களை தாம் கூறவில்லையென்றும், குறிப்பிட்டார். அத்துடன் இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜெயரத்னவிடம் கேள்வி எழுப்புமாறும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், அமைச்சர் சமல் ராஜபக்ச இந்த சம்பவம் தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும், அதனடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், குறிப்பிட்டார்.

# நினைவஞ்சலிக் கூட்டமும் மலர் வெளியீடும்



சிவ பூமியாம் ஈழ நாட்டின் வடபால் அமைந்த, பொன்னாலையில் பிறந்து, வளர்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தன் வாழ்வின் பெரும் பங்கை அர்ப்பணித்து, கடந்த மார்ச் மாதம் 26.03.2021 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த, பண்டிதர் தியாகராஜா பொன்னம்பலவாணரின் அவர்களின் நினைவாக, அஞ்சலிக் கூட்டமும் மலர் வெளியீடும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணிக்கு பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு, குடும்பத்தினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.

# களுத்துறையின் பல பகுதிகளுக்கு 10 மணி நேர நீர்வெட்டு




களுத்துறை மாவட்டத்தின் சில பகுதிகளில் 10 மணி நேர நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருத்த வேலைகள் காரணமாக, இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் நேற்றுக் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரையில் இவ்வாறு நீர்வெட்டு அமுலில் இருந்தது.

வாத்துவ, வஸ்கடுவ, பொதுப்பிட்டிய, களுத்துறை வடக்கு மற்றும் தெற்கு கட்டுகுருந்த, நாகொட, பிலமினாவத்தை, போம்புவல ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

அத்துடன் பயாகல, மக்கொன, பேருவளை, மொரகல்ல, களுவாமோதர, தர்கா டவுன், அளுத்கம மற்றும் பெந்தோட்டை ஆகிய பகுதிகளுக்கும் நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் திறப்பு



கடும் மழையினால், பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்று முன்தினம் இரவுமுதல் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் எட்டு வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதால், நீர்த்தேக்கத்தின் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள், இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# நாம் இணைந்திருப்பதால்தான் அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை

## -அரசாங்கத்திற்கு நினைவூட்டிய மைத்திரி-



அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மீது, ஆளும் தரப்பினரே பொய்யான குற்றச்சாட்டுகளை கடுமையான முறையில் முன்வைப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்திருந்தால்தான் அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்பதை, நினைவில் வைத்துக்கொள்ளவேண்டுமென அவர் ஞாபகமூட்டினார்.

சுதந்திரக் கட்சியின் மீது சேறு பூசும் செயற்பாடுகள் பாரதூரமானவையென்பதை நினைவூட்டிய அவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 14 பேர், அரசாங்கத்திற்குள் இருப்பதையும்,நினைவில் கொள்ள வேண்டுமென, நினைவூட்டினார்.

அத்துடன், தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், பயன்படுத்திய வாகனங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள், அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே முன்வைத்த குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் அவர் கடுந்தொனியில் பதிலளித்தார்.

# ஒரே நாளில் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி

நாட்டில் நேற்று முன்தினம் மட்டும், 20,884 பேருக்கு கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு அறிவித்துள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் 17,798 பேருக்கு பைஸர் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, பைஸர் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 398,013 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், 636 பேருக்கு பைஸர் முதலாம் தடுப்பூசியும், 426 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டன. அதேநேரம், 494 பேருக்கு சைனோபாம் முதலாம் தடுப்பூசியும், 1,529 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியை தாமதிக்கக் கூடாது

## பிரதமர் மஹிந்த வலியுறுத்து



பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி தாமதப்படுத்தப்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டுமென, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வைத்து வலியுறுத்தினார்.

மருத்துவ பட்டப் படிப்பினை 22 வயதில் நிறைவுசெய்வது மற்றும் ஏனைய அடிப்படையான பட்டப் படிப்புகளை 20 வயதில் பூர்த்தி செய்வது தொடர்பில், அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது முன்வைத்த முன்மொழிவு தொடர்பில், கவனம் செலுத்திய பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியன ஏற்கனவே இது தொடர்பில் கவனம் செலுத்தி திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்தி, காலதாமதமின்றி பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு வருவதாக, இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுனர்களிடமிருந்து வருமான வரி அறவிடுவதில் நல்லாட்சி அரசாங்கக் காலப்பகுதியில் காணப்பட்ட கொள்கைக்கு மாறாக, மஹிந்த ராஜபக்ஷ யுகத்தின் வரிக் கொள்கையை அமுல்படுத்துமாறு, அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் சார்பில், விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெனிய இச்சந்திப்பின் போது, கேட்டுக் கொண்டார்.

12 சதவீதமாகக் காணப்பட்ட வருமான வரியானது, நல்லாட்சி அரசாங்கத்தினால் 24 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளதாகவும், தொழில் வல்லுனர்கள், வர்த்தகர்களாக கருதப்பட்டு அம்மட்டத்தில் வரி அறவிடப்படுவதாகவும், வைத்தியர் அனுருத்த பாதெனிய சுட்டிக் காட்டினார்.

குறித்த பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில், நடவடிக்கை எடுப்பதற்கு அதனுடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடலொன்றை தயார்ப்படுத்துமாறு, பிரதமர் இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு பொதுமக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்ட எமது சபையின் 2022 ஆம் நிதியாண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத் திட்ட வரைபினை, இன்றுமுதல் எதிர்வரும் 06 ஆம் திகதி வரையான காலப் பகுதியில், பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வையிட முடியும்.

அத்துடன் இவ்வரைபு பாதீடு தொடர்பில் பொதுமக்களினால் ஏதேனும் முன்மொழிவுகள் தெரிவிப்பதாயின், அதனை எழுத்து மூலம், 06 ஆம் திகதிக்கு முன்னதாக, சபையின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு, காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் மயிலன் அப்புத்துரை கேட்டுக் கொண்டுள்ளார்.

# சீமெந்து வியாபாரிகளுடன் முக்கிய கலந்துரையாடல்

சம்மாந்துறை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சீமெந்து தட்டுப்பாடு மற்றும் உத்தரவாத விலையை நிர்ணயம் செய்தல் குறித்து, சீமெந்து வியாபாரிகளுடான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் தலைமையில், பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, சீமெந்துப் பையில் பொறிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்வது குறித்தும் சீமெந்து தட்டுப்பாடு நிலவுவதற்கான காரணத்தையும், சீமெந்து வியாபாரிகளிடம் கேட்டறிந்ததுடன், எதிர்காலத்தில் இப் பிரச்சினையினை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும், ஆராயப்பட்டது.

சீமெந்து வியாபாரத்தில் பதுக்கல் மேற்கொள்ளாமல், பொதுமக்களுக்கும் பாதிப்பு அல்லாத வகையில், சீமெந்து வியாபாரிகள் மனச்சாட்சியுடன் சீமெந்து வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு தவிசாளர் சீமெந்து வியாபாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

# வாக்காளர்கள் பெயர்களைப் பதிவு செய்வதற்கு 3ஆம் திகதிவரை அவகாசம்




உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு, உள்ளூராட்சி மன்றங்களின் யாப்பு ரீதியிலான பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு, அனைத்து மாவட்ட மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிப்பதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் அடுத்த வருடம் (2022) பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. அதன்பிரகாரம் உரிய படிவங்கள், அலுவலர்கள் மற்றும் வாகனங்கள் கணக்கெடுப்பு, வாக்களிப்பு நிலையங்களைக் கண்டறிந்து, அவற்றின் குறைபாடுகளை கண்டறிதல் உள்ளிட்ட பணிகளை ஆரம்பிப்பதற்காக, மாவட்ட துணை மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிப்பதற்கு, தேர்தல் ஆணைக் குழு தீர்மானித்துள்ளதாக, அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு (2021) வாக்காளர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்யத்தவறியவர்கள், அது தொடர்பான தகவல்களை டிசம்பர் மாதம் 03 ஆம் திகதிக்கு முன்னர், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிப்பதற்கு, தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

# கிழக்கு மாகாணத்தைக் காப்பாற்ற தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை மேம்பட வேண்டும்

## - இரா.சாணக்கியன் வலியுறுத்து

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாகச் செயற்படாவிடின், எதிர்காலத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம், கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவிடுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கனடா வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தினரை நேற்று முன்தினம்(புதன்கிழமை) சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், உண்மையிலேயே என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அனைத்து சமூகங்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவராகவே நான் என்னைப் பார்க்கின்றேன்.

நான் அனைத்துப் பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுக்கின்றேன். இதில், இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியிலேயே, அதிக வரவேற்புக் கிடைத்துள்ளது. தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் போது எங்களைப் பாராட்டுவதனை விடவும், இஸ்லாமியர்களுடைய பாராட்டுக்கள் அதிகமாகவே காணப்படுகின்றது. ஆனால், நான் வாக்குகளை எதிர்பார்த்து சேவையாற்றவில்லையெனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேலும் தெரிவித்தார்.

# படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு ரிஷாட் எம்.பி நேரில் விஜயம்

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் கடந்த செவ்வாய்க்கிழமை படகுப் பாதை விபத்துக்குள்ளான சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு சென்ற மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.





# இந்தியாவின் 13-15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு புகையிலை பழக்கம்

### -கணக்கெடுப்பில் அதிர்ச்சித் தகவல்-



59.1 சதவீதம் பேர் திறந்தவெளி பொது இடங்களில் புகையிலையை தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

புதுச்சேரி மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம், தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டம் அரசு மார்பு நோய் நிலையம், ஜிப்மர் நோய் தடுப்பு மற்றும் சமூக மருத்துவ துறை சார்பில் உலக இளைஞர்கள் புகையிலை பயன்பாட்டு தகவல் இதழ் வெளியீட்டு நிகழ்ச்சி மற்றும் புகையிலை நிறுவனங்களில் குறுக்கீடு தொடர்பான பயிலரங்கு அங்குள்ள ஹோட்டலில் நடந்தது.

உலக இளைஞர்கள் புகையிலை பயன்பாட்டு கணக்கெடுப்பில் கிடைத்த தகவலின்படி, 'புதுவையில் 13-15 வயதிற்குப்பட்ட மாணவர்களில் 4.3 சதவீதத்தினர் புகைக்கும் அல்லது மெல்லும் வகையிலான புகையிலையில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தி வருகின்றனர். இது தேசிய சராசரியான 8.5 சதவீதத்தை ஒப்பிடும் போது பாதியளவு குறைவானது.

புகையிலை இல்லா வழிகாட்டு நெறிமுறைகளை 63.6 சதவீதம் பள்ளிகள் பின்பற்றுகின்றன. 45.5 சதவீதம் பள்ளிகள் புகையிலை இல்லா பள்ளிக்கூடம் என்ற தகவல் பலகை வைக்க வேண்டும் என்ற நெறிமுறை பற்றி அறிந்துள்ளன.

52.6 சதவீதம் பேர் மூடப்பட்ட பொது இடங்களில் புகையிலையை தடை செய்ய வேண்டும் என்றும், 59.1 சதவீதம் பேர் திறந்தவெளி பொது இடங்களில் புகையிலையை தடை செய்ய வேண்டும் என்று அந்த இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொவிட் சீல்ட் தடுப்பூசிகள் கொவேக்ஸ் திட்ட நாடுகளுக்கு



கொவேக்ஸ் நாடுகளுக்கு விரைவில் கொவிட்-19 தடுப்பூசிகளை வழங்க சேரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

பிற நாடுகளுக்கு கொவிட் தடுப்பூசிகளை வழங்க, இந்திய அரசாங்கத்திடம் இருந்து ஒப்புதல் பெற்ற பிறகு விநியோகம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அதேபோன்று நேபாளத்திற்கு தேவையான கொவிட் சீல் தடுப்பூசிகளை அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, உலகின் பிற நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்க சேரம் நிறுவனத்திற்கு இந்திய அரசாங்கம் அனுமதித்தது. ஆனால் ஏனைய நாடுகளுக்கு கொவிட் தடுப்பூசிகளை வழங்க கடந்த ஏப்ரல் மாதம் தடை விதிக்கப்பட்டது.

உலகின் மிகப்பெரிய தடுப்பூசிகள் தயாரிப்பாளராக இருப்பதால், இப்போது ஒவ்வொரு மாதமும் 120 மில்லியன் டோஸ் கொவிட்சீல் தடுப்பூசிகளை சேரம் நிறுவனம் உற்பத்தி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# குஜராத் - க்ரீக் பகுதியில் பெரும் பயிற்சியில் இந்திய இராணுவம்



இந்திய இராணுவம் துகஷின் சக்தி என்ற குறியீட்டுப் பெயரில் நான்கு நாள் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. குஜராத் மற்றும் ராஜஸ்தான் பகுதிகளில் இந்த பயிற்சி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தின் புனேவை தளமாகக் கொண்ட தெற்குக் கட்டளையகத்தில் ஊடாக முன்னெடுக்கப்பட்ட இந்த பயிற்சி நடவடிக்கையில் இராணுவம், விமானப்படை, கடற்படை, கடலோரக் காவற்படை, எல்லைப் பாதுகாப்புப் படை, குஜராத் மாநில காவல் துறை மற்றும் மீன்வளத் துறை ஆகியவற்றை உள்ளடக்கியதாக இடம்பெறறது. சேர் க்ரீக் என்பது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ரான் ஆப் குட்ச் பகுதியில் சர்ச்சைக்குரிய 96 கிமீ கடல் பகுதி ஆகும். இது குஜராத்தின் குட்ச் பகுதியையும் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தையும் பிரிக்கிறது.

இந்தப் பயிற்சியானது துருப்புகளை நிலை நிறுத்தல், முப்படைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் போர் உபாயங்களை வகுத்தல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

### -தமிழகத்தில் கடும் மழை-

# 4 மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை



தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதியால், தமிழகதத்தில் சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து மிதமான மழை பெய்து வருகிறது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மீண்டும் தீவிரமடைந்துள்ளதால், பல்வேறு மாவட்டங்களில் வரும் நாளை மறுதினம் வரை மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதையடுத்து, தமிழகத்தில் சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இதன் எதிரொலியால், புதுக்கோட்டை, திருவாரூர், மயிலாடுதுறை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பாடசாலைகளுக்கு மட்டும் நேற்று விடுமுறை வழங்குவதாக அம்மாவட்ட ஆட்சியர்கள் உத்தரவிட்டார்.

# தடுப்பூசி போடுவதில் பின்தங்கும் புதுச்சேரி




புதுச்சேரியில் 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி எட்டப்படவில்லை. 3அரை இலட்சம் பேர் முதல் தவணையே போடாத நிலை இருந்து வருவதால் மத்திய அரசு கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

புதுச்சேரி மாநிலத்தை பொறுத்தவரை மற்ற மாநிலங்களை போல் அல்லாமல் கொரோனா தடுப்பூசிக்கு தட்டுப்பாடு இருந்தது இல்லை. தடுப்பூசி போடுபவர்கள் எண்ணிக்கை முதலில் குறைவாக இருந்தது.

100 சதவீதம் தடுப்பூசி போட்ட மாநிலம் என்ற இலக்கை தொட சுகாதாரத்துறை அவ்வப்போது தடுப்பூசி திருவிழா நடத்தி வருகிறது. அக்டோபர் 2 ஆம் திகதிக்குள் 100 சதவீத தடுப்பூசி போட முயற்சி எடுக்கப்பட்டது. இருந்த போதிலும் அந்த இலக்கினை எட்ட முடியவில்லை.

ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் நூறு சதவீதம் தடுப்பூசி செலுத்திய மாநிலமாக புதுச்சேரியை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். பல இடங்களில் கொரோனா தடுப்பூசி முகாம்களை ஆரம்பித்து வைத்தார். ஆனாலும் தடுப்பூசி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை.

பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் தடுப்பூசி போட வரும் பொதுமக்களுக்கு கொரோனா பரிசோதனை கட்டாயப்படுத்தப்படுகிறது. இதனால் பலர் தடுப்பூசி போட்டுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். அதாவது, ஆரம்ப சுகாதார நிலையம் வரை வந்து விட்டு கட்டாய பரிசோதனைக்கு பயந்து தடுப்பூசி போட்டுக்கொள்ளாமல் திரும்பி விடுகின்றனர்.

சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் உள்ளவர்கள் பயத்தால் தடுப்பூசி போட்டுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். இதெல்லாம் தடுப்பூசி போடுவோரின் எண்ணிக்கை குறைந்ததற்கு காரணமாக கூறப்படுகிறது.

புதுவையில் 18 வயது நிரம்பிய வாக்காளர்கள் 10 இலட்சம் பேர் உள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை வரை முதல் தவணை தடுப்பூசியை 7 இலட்சத்து 40 ஆயிரத்து 655 பேரும், 2 ஆவது தவணை தடுப்பூசியை 4 இலட்சத்து 45 ஆயிரத்து 659 பேரும் செலுத்திக்கொண்டுள்ளனர். இவர்களில் சிலர் அண்டை மாநிலத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

கிட்டத்திட்ட 75 சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து தடுப்பூசி போடும் பணிகளை தீவிரப்படுத்தி உள்ளோம். இப்போது வீடுவீடாக சென்று தடுப்பூசி செலுத்தாதவர்களை அடையாளம் கண்டு தடுப்பூசி போட்டு வருகிறோம். ஆளுநர், முதலமைச்சர் சுகாதாரத்துறை செயலாளர் ஆகியோர் இந்த பணிகளை முடுக்கி விட்டு வருகின்றனர்.

### நொய்டா சர்வதேச விமான நிலையம்

# நேற்று அடிக்கல் நாட்டினார் பிரதமர் நரேந்திர மோடி




நொய்டா சர்வதேச விமான நிலைய பணிகளுக்கு நேற்று வியாழக்கிழமை பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

உத்தரப் பிரதேசத்தில் 2012 வரை லக்னோ மற்றும் வாரணாசி ஆகிய இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் மட்டுமே இருந்தன. குஷிநகரில் மூன்றாவது சர்வதேச விமான நிலையம் அக்டோபர் 20 அன்று பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட பிறகு செயல்பாட்டுக்கு வந்தது.

அதே நேரத்தில் அயோத்தியில் விமான நிலையத்தின் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றன. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இது பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது ஐந்தாவது சர்வதேச விமான நிலையமானது நொய்டாவிற்கு அருகிலுள்ள ஜெவாரில் வர உள்ளது. இந்த விமானநிலையமும் கட்டமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வரும் பட்சத்தில், நாட்டில் அதிக சர்வதேச விமான நிலையங்களை கொண்ட மாநிலமாக உத்தரப்பிரதேசம் இருக்கும்.

இந்த விமான நிலையம் வருகிற 2024 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் என்றும் 34 ஆயிரம் கோடி ரூபாவில் இந்த விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், நொய்டா சர்வதேச விமான நிலைய பணிகளுக்கு நேற்று பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.



















# நாடு தவறான பாதையில் செல்கிறது 87 சதவீத பாகிஸ்தான் மக்கள் கருத்து

நாடு தவறான பாதையில் செல்கிறது என பாகிஸ்தானியர்களில் 87 சதவீதம் பேர் அந்நாட்டின் பாகிஸ்தான் ஆய்வு நிறுவனம் நடத்திய கருத்துகணிப்பில் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் ஐபிஎஸ்ஓஎஸ் ஆய்வு நிறுவனம் நடத்திய நுகர்வோர் நம்பிக்கை குறியீட்டின் நான்காவது காலாண்டு அறிக்கை வெளியிட்டது.

அதில் பாகிஸ்தானில் தற்போதைய பொருளாதார நிலை குறித்து கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. இதில் கிட்டதட்ட 1,100 பேர் பங்கேற்றுள்ளனர்.

இந்த கருத்துகணிப்பில் பதிலளித்தவர்களில் 46 சதவீதம் பேர் பாகிஸ்தானின் பொருளாதார நிலை பலவீனமாக இருப்பதாகவும், 43 சதவீதம் பேர் பணவீக்கம் தான் நாட்டின் மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ந்து, 14 சதவீதம் பேர் பாகிஸ்தானில் வேலையின்மை முதன்மையான பிரச்சினையாக உள்ளதாகவும், 12 சதவீதம் பேர் வறுமை பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் தற்போதைய பொருளாதார நிலை குறித்த கேள்விக்கு பதிலளித்த 49 சதவீதம் பேர் பொருளாதார நிலை அப்படியேதான் இருக்கிறது என்று கூறியுள்ளனர். ஆனால் 46 சதவீதம் பேர் பொருளாதாரம் பலவீனமாக இருப்பதாகவும், வெறும் 5 சதவீதம் பேர் மட்டுமே நாட்டின் பொருளாதார நிலை வலுவாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அடுத்த 6 மாதங்களில் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் குறித்து கேட்டபோது, 64 சதவீதம் பேர் பொருளாதாரத்தில் முன்னேற்றம் இருக்காது என்றும், 12 சதவீதம் பேர் பொருளாதார மேம்பாட்டில் நம்பிக்கை இல்லை என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், 24 சதவீதம் பேர் இதில் நம்பிக்கையோ அல்லது ஏமாற்றமோ இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.



அவர்களின் தனிப்பட்ட நிதி நிலைமை குறித்து கேட்டபோது, 47 சதவீதம் பேர் பலவீனம் மற்றும் நிலையற்று இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். 5 சதவீதம் பேர் வலுவாக உள்ளதாக பதிலளித்துள்ளனர். இருப்பினும், 48 சதவீதம் பேர் தங்கள் தனிப்பட்ட நிதி நிலை பலவீனமாகவும் இல்லை அல்லது வலுவாகவும் இல்லை என்று கூறியுள்ளனர்.

நாடு தவறான பாதையில் செல்கிறது என பாகிஸ்தானியர்களில் 87 சதவீதம் பேர் நம்புவதாக கருத்துகணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சதவீதம் கடந்த 27 மாதங்களில் இல்லாத அளவில் அதிகமாக உள்ளதாகவும், அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முழுமையாக தடுப்பூசி போட்டவர்கள் சுதந்திரமாக நியூசிலாந்து செல்லலாம்



கொரோனா தடுப்பூசியை முழுமையாக செலுத்திக்கொண்ட வெளிநாட்டினர் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நியூசிலாந்துக்கு வரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா கட்டுப்பாடுகளை நிர்வகிக்கும் சிறப்பு அமைச்சர் கிறிஸ் ஹிப்கின்ஸ் இதனை அறிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில்:-

கொரோனா தொற்றில் இருந்து நமது நாட்டை பாதுகாப்பாக வைத்திருக்க நாம் எடுத்த முதல் தீர்க்கமான நடவடிக்கை நமது எல்லைகளை மூடுவது. அதே போல் கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்துவதில் நமது கடைசி நடவடிக்கை எல்லைகளை திறப்பது ஆகும் என்றார்.

மேலும் அவர் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட நியூசிலாந்து பிரஜைகள் அடுத்த ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி முதல் நியூசிலாந்து வரலாம்.

அதே போல் 2 டோஸ் தடுப்பூசி எடுத்துக்கொண்ட நியூசிலாந்து மக்கள் பிப்ரவரி 13 ஆம் திகதி முதல் வெளிநாடுகளுக்கு செல்லலாம். அதன் தொடர்ச்சியாக ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட வெளிநாட்டினர் நியூசிலாந்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என கூறினார்.

# வாகா வழியாக ஆப்கானுக்கு இந்தியாவின் வாகனங்கள் செல்ல பாகிஸ்தான் அனுமதி



ஆப்கானிஸ்தானுக்கு இந்தியாவின் உதவிப் பொருட்கள் லொரி மூலம் வாகா எல்லை வழியாக கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா அனுப்பும் கோதுமை, தடுப்பூசிகள், மருந்துகள் உள்ளிட்ட பொருட்களை ஏற்கத் தயார் என்று தாலிபன் அரசு தெரிவித்த நிலையில் சுமார் 50 ஆயிரம் மெட்ரிக் டொன் பொருட்கள் ஆப்கானுக்கு அனுப்பி வைக்க இந்தியா முடிவு செய்தது.

இந்த சரக்குகள் பாகிஸ்தான் சாலைகள் வழியாக செல்ல அனுமதி கோரப்பட்டது. இதனை ஏற்றுக் கொள்வதாக கடந்த திங்கட்கிழமை பிரதமர் இம்ரான் கான் அறிவித்த நிலையில் நேற்று அதிகாரபூர்வமாக இந்தியாவுக்கு பாகிஸ்தான் அரசு தகவல் அனுப்பியுள்ளது.

# செல்பி மோகத்தால் முதலையிடம் மாட்டிய நபர்

பிலிப்பைன்ஸ் நாட்டில் பொம்மை முதலை என நினைத்து செல்பி எடுக்க குழியில் இறங்கியவரை நிஜமான முதலை தாக்கியதில் படுகாயமடைந்தார்.

நெஹிமியாஸ் சிப்பாடா என்பவர் தனது 68 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு ககாயன் என்ற இடத்தில் உள்ள கேளிக்கைப் பூங்காவிற்குச் சென்றார்.

அங்கு 12 அடி நீளத்திற்கு இருந்த முதலையைக் கண்ட அவர் அது பொம்மை என நினைத்து அது இருந்த குழிக்குள் இறங்கி செல்பி எடுக்க முயன்றார். ஆனால் எதிர்பாராத விதமாக அந்த முதலை நெஹிமியாசின் கையைக் கடித்துப் பிடித்துக் கொண்டது.

அப்போதுதான் உண்மையான முதலையிடம் சிக்கிக் கொண்ட விஷயம் அவருக்குத் தெரியவர சில விநாடிகள் அமைதியாக யோசிக்கும் போது திடீரென தன்னை விடுவித்துக் கொண்டு அங்கிருந்து தப்பினார்.

# பதவியேற்ற சில மணி நேரங்களிலேயே பதவி விலகிய சுவீடன் முதல் பெண் பிரதமர்



வரவு - செலவு திட்டம் தோல்வி மற்றும் கூட்டணி கட்சி விலகல் உள்ளிட்ட காரணங்களால் பதவியேற்ற சில மணி நேரங்களில் சுவீடன் முதல் பெண் பிரதமர் மாக்டெலனா ஆண்டர்சன் பதவி விலகினார்.

சுவீடன் நாடாளுமன்றத்தில் மாக்டெலனா ஆண்டர்சன் தாக்கல் செய்த வரவு - செலவு திட்டத்தை கூட்டணி கட்சியான கிரீன்ஸ் பார்ட்டி வலது சாரி கொள்கைகள் உடைய எதிர்கட்சியான சுவீடன் ஜனநாயக கட்சியுடன் இணைந்து நிராகரித்தது.

இதையடுத்து தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்த மாக்டெலனா ஆண்டர்சன், ஒற்றை தலைமை கொண்ட ஆட்சியை வழிநடத்த விரும்புவதாக தெரிவித்தார். பிரதமரின் விலகல் முடிவை அடுத்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசித்து அடுத்த கட்ட முடிவுகள் எடுக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

# ஆப்கனில் கால் பதிக்க சீன நிறுவனங்கள் ஆர்வம்

ஆப்கனில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதை அடுத்து, அங்குள்ள கனிம வளங்களை பயன்படுத்தி தொழில் துவங்க சீன நிறுவனங்களிடம் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

தெற்காசிய நாடான ஆப்கனில், மக்களாட்சி அகற்றப்பட்டு பழமைவாத கொள்கைகளை பின்பற்றும் தலிபான் ஆட்சி அமைந்துள்ளது. பாகிஸ்தானை தொடர்ந்து தலிபான் அரசுக்கு சீனாவும் ஆதரவளித்து வருகிறது. ஆப்கனில் சீனா, பாக்., ரஷ்யா ஆகிய 3 நாடுகளின் தூதரகங்கள் இன்னும் செயல்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் சீனா, ஆப்கன் மக்களுக்கு ஆயிரம் டன் உணவுப் பொருட்களை வழங்கியது. அத்துடன், 230 கோடி ரூபாய் நிதியுதவியை அறிவித்துள்ளது. அரசியல் ரீதியில் ஆப்கனை உலக நாடுகள் அங்கீகரிக்க தேவையான முயற்சிகளையும் சீனா எடுத்து வருகிறது.

இந்த நடவடிக்கைகளை, சீன நிறுவனங்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளன. சமீபத்தில் சீன அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த, 20 நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆப்கன் வந்து 'லித்தியம்' தாமிரம் சார்ந்த தொழில்களை துவங்குவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். ஆப்கனில் 75 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புடைய லித்தியம், தாமிரம் உள்ளிட்ட கனிம வளங்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**சாலமன் தீவுகளில் பெரும் வன்முறை:**

# நாடாளுமன்றத்துக்கு தீ வைத்ததால் பரபரப்பு



சாலமன் தீவுகளில் ஏற்பட்ட வன்முறையின்போது, அந்நாட்டு நாடாளுமன்றத்துக்கு தீவைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.


தென் பசிபிக் பெருங்கடலில் நூற்றுக்கணக்கான தீவுகளை கொண்ட நாடு சாலமன் தீவுகள். இந்நாட்டின் பிரதமராக 2019 ஆம் ஆண்டு முதல் இருந்து வருபவர் மானசே சோகவரே. இந்த நிலையில் அண்மையில் இவர், தைவானுடனான தூதரக உறவை துண்டித்துவிட்டு, சீனாவுடன் தூதரக உறவை ஏற்படுத்தினார். இதற்கு கடும் எதிர்ப்பு எழும்பியது.

அரசின் இந்த முடிவை நாட்டின் பல்வேறு மாகாண அரசுகள் ஏற்க மறுத்தன. இதை தொடர்ந்து, பிரதமர் மானசே சோகவரேவை பதவி விலக வலியுறுத்தி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இந்த நிலையில் இந்த கோரிக்கையை வலியுறுத்தி நேற்று தலைநகர் ஹோனியாராவில் உள்ள நாடாளுமன்றம் முன்பு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினர்.

அப்போது பொலிஸார் அவர்களை விரட்டியடிக்க முயன்றதால் இருதரப்புக்கும் இடையில் மோதல் வெடித்தது. பின்னர் இந்த மோதல் பெரும் வன்முறையாக வெடித்தது.

இதை தொடர்ந்து போராட்டக்காரர்கள் நாடாளுமன்ற கட்டிடத்துக்கும், அதன் அருகில் உள்ள ஒரு பொலிஸ் நிலையத்துக்கும் தீவைத்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# பிறப்பு விகிதம் குறைவுக்கு மத்தியில் சீனாவில் திருமணங்கள் செய்வது சரிவு




சீனாவில் குழந்தைகள் பிறப்பு விகிதத்தை பொறுத்தமட்டில் அது கடந்த ஆண்டில் 0.85 சதவீதமாக இருந்தது. 1978-க்கு பின்னர் தொடர்ந்து பிறப்பு விகிதம் ஒரு சதவீதத்துக்கு கீழே உள்ளது.

உலகிலேயே அதிக மக்கள் தொகையை கொண்டுள்ள நாடு சீனா. ஆனால் அங்கு இப்போது குழந்தைகள் பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்த நிலையில் அங்கு இப்போது திருமணங்கள் செய்வதும் குறைந்து வருவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 17 ஆண்டுகளாக தொடர்ந்து திருமண பதிவுகள் குறைந்துள்ளதாக சீன புள்ளியியல் ஆண்டு புத்தகம் காட்டுகிறது. நடப்பு 2021-ம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் அங்கு 58 இலட்சத்து 70 ஆயிரம் ஜோடிகள் திருமணம் செய்து கொண்டுள்ளனர். இது கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில் குறைவுதான்.

இது தொடர்ந்து குறையும் என எதிர்பார்ப்பதாக சீன அரசு நாளிதழ் கூறி உள்ளது. சீனாவில் குழந்தைகள் பிறப்புவிகிதத்தை பொறுத்தமட்டில் அது கடந்த ஆண்டில் 0.85 சதவீதமாக இருந்தது. 1978-க்கு பின்னர் தொடர்ந்து பிறப்பு விகிதம் ஒரு சதவீதத்துக்கு கீழே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகில் கொரோனா பாதிப்பு 25.96 கோடியாக உயர்வு



உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25.96 கோடியாக அதிகரித்துள்ளது.

சீனாவின் வுகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 221 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 கோடியே 96 இலட்சத்து 79 ஆயிரத்து 753 ஆக அதிகரித்துள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு கோடியே 96 இலட்சத்து 77 ஆயிரத்து 824 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 23 கோடியே 48 இலட்சத்து 10 ஆயிரத்து 663 பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், கொரோனா வைரசால் உலகம் முழுவதும் இதுவரை 51 இலட்சத்து 91 ஆயிரத்து 266 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர்ந்தோர் பயணித்த படகு மூழ்கியதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 27 பேர் பலி



புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இங்கிலாந்தை நோக்கி பயணித்த படகொன்று பலத்த காற்று காரணமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 அகதிகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை பிரான்ஸ் நகர் கலேஸுக்கு அருகே ஆங்கிலக் கால்வாயில் இடம்பெற்றுள்ளது.

பிரான்சையும் ஐக்கிய இராச்சியத்தையும் பிரிக்கும் கடலில் குடியேறியவர்கள் சம்பந்தப்பட்ட அண்மைக் காலத்தில் பதிவான மோசமான சம்பவமாக இது கருதப்படுகிறது.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களில் ஐந்து பெண்களும் ஒரு சிறுமியும் அடங்குவதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மானின் தெரிவித்துள்ளார்.

உயிர் பிழைத்த இருவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்ததாகவும், மற்றொரு நபர் இன்னும் காணவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.